
1424

கர்த்தா } வை. மு. கோதை நாயகி அம்மாள்.
பத்திராதிபர்த்தா

# JEGAN MOHINI

# ஜெகன் மோகினி

மலர் III 1926 இதழ் 9.



15 MAR 1927
OFFICE OF THE REGISTRAR OF

JE
N211, N22 J9
N26.3.9
(82827)

ஜெகன் மோகினி ஆபீஸ்,
26 தோடித் தெரு,
திருவல்லிக்கேணி மதராஸ்.

குறிப்பு:—ஒவ்வொருமாதமும் கடைசித்தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்.

அநேக நாட்களாய் எதிர்பார்த்தது! இப்பொழுதே வெளிவந்தது!

# பாண்டுரங்க பக்த விஜயம்

## ஐந்து பாகங்கள் அடங்கியது

பண்டரீபுர பக்தர்களின் சரித்திரங்கள் முழுமையும் அவர்களுடைய உருவப் படங்களும் இதில் அடங்கியிருக்கின்றன. ராயல் சைஸ் ஆயிரம் பக்கங்களுக்கு மேற்பட்டது. அழகான காலிகோ கட்டடம் செய்துள்ளது.

ஏழை, பணக்காரன், புத்தியுள்ளவன், புத்தி இல்லாதவன், பக்தியுள்ளவன், பக்தியில்லாதவன் ஆகிய எந்த நிலைமையிலிருப்பவர்களும் படித்து நற்கதியடையலாம். இந்தப் புத்தகம் கையிலிருந்தால் எவரும் தங்கள் வாழ்நாளை அமைதியாகவும், ஆனந்தமாகவும் கழிக்கலாகும். இதனைப் படிப்பதனால் புருஷார்த்தங்களெல்லாம் கைகூடும். இந்தப் புத்தகம் வைத்திருக்கும் வீட்டில் பகவான் சகல சம்பத்துடன் வாசம் செய்வாரென்பது பக்தர்களின் கொள்கை.

விலை ரூ. **6-0-0** வி. பி.

---

புதிய நாவல்! இப்பொழுது வெளிவந்தது!

# ஆயிரம் தலைவாங்கிய

# அதிசய சிந்தாமணி

**3** ஆப்டோன் படங்கள் **350** பக்கங்கள்

விலை ரூபா ஒன்று.

எம். எஸ். ராமுலு கம்பெனி,

புத்தக வியாபாரம், ராயபுரம், மதராஸ்.

---

குறைந்த விலை! அபூர்வ விஷயம். சுத்தப் பதிப்பு!!

**English Self Instructor**. Rs. 1-8-0




## இங்கிலீஷ் உபாத்தியாயர்

அல்லது

## இங்கிலீஷ் கற்கும் வழி

நாவல் உலகத்தில் பிரசித்தி பெற்ற

வடூவூர் - கே. துரைசாமி ஐயங்கார் அவர்களின்

முகவுரையுடன் கூடியது.

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்களின் உச்சரிப்பு நன்குக விளங்கும்படி வெளியிடப்பட்டிருக்கின்றது. உபாத்தியாயர் இல்லாமலே சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். பெண்பாலர்களும் சுலபமாய்க் கற்றுக்கொள்ளலாம்.

தி. மதராஸ் நாவல் டிபோ,

3, இருசப்பன் சந்து, மின்ட் பில்டிங்ஸ் மதராஸ்.

OFFICE OF THE REGISTRAR
15 MAR 1927

## 12-வது அதிகாரம்

### வம்புக்காரர் நேசம் நம்பிவிட்டால் மோசம்.

நுங்கம்பாக்கத்தில் ஒரு குறுகிய சந்தில் நமது துப்பறியும் ராஜாராம் நாயுடு ஓர் ஆசாமியைக் கண்டுபிடிக்கும் பொருட்டுச் சென்று பார்த்த காலத்தில் வாழை இலைக்கட்டுபோல ஒரு பெண்ணைக் கட்டி யனுப்பிவிட்டதாகச் சொன்னோமல்லவா? பிறகு என்ன நடந்ததென் பதைக் கவனிப்போம்.

வாழை இலைக்கட்டை எடுத்துக்கொண்டு சென்ற ஆசாமி அங் கிருந்த கிழவியிடத்தில் "நான் போனபிறகு நம்முடையவர் வருவார்; ஜாக்கிரதை" என்று சொல்லிவிட்டுச் சென்றமையால், கிழவி வெகு ஊக்கத்தோடு அந்த மனிதனின் வருகையை எதிர்பார்த்திருந்தாள். வாழை இலைக்கட்டை எடுத்துச்சென்ற மூன்றுவது தினம் கிழவி எதிர்பார்த்திருந்தபடி ஒரு மனிதன், கட்டுமஸ்தான தேகவமைப்புடன் முறுக்கிவிட்ட மீசையுடன் தலையில் பெரிய முண்டாசு கட்டியவனுய் கையில் ஒரு சிறிய மூட்டையுடன், கிழவியை நோக்கிப் புன்முறுவல் பூத்த முகத்துடன் "பாட்டி! விருந்திற்கு வந்துவிட்டேன். தம்பி நேற்று தான் வந்துசேர்ந்தான். உடனே நான் புறப்பட்டு வந்து விட்டேன். என்ன! நீ சௌக்கியந்தானே?" என்று வினவிக்கொண்டே உள்ளே வந்து அங்குப் போடப்பட்டிருந்த விசிப்பலகையின் மீது உட்கார்ந்தான்.

உடனே கிழவி மரியாதையோடு பேசத்தொடங்கி "ஐயா! எனக்கு வயது அதிகமாகிவிட்டபடியால் சடக்கென்று மனிதர் களை நிதானமறிய முடிகின்றதில்லை. தங்கள் அடையாளமே எனக்குத் தெரியவில்லையே. தங்களுடைய பெயரென்ன? தம்பி வந்துவிட்டான் என்றீர்களே; அவர் யார்? எனக்கு விளங்கச்சொல்ல வேண்டும்" என்றுள்.

அதைக் கேட்டு அவர் சிரித்துக்கொண்டே "என்ன பாட்டி! 'அன்னியன் யாரோ வந்துவிட்டான்' என்று பயப்பட்டு இப்படிக் கேட்கிருயா? அந்த சந்தேகம் வேண்டாம். என்னை நீ அதிகமாய்ப் பார்த்திருக்கமாட்டாய். ஏனெனில் நான் நெடுநாளாய் இரங்கூனி

லேயே இருந்துவிட்டேன். போனவாரந்தான் என்னை உடனே புறப்பட்டு வரும்படிக்குத் தம்பி தந்தியடித்தான். உடனே நான் புறப்பட்டு வந்தேன். நேற்று தம்பி, நீ தந்திரமாய் வாழை இலையில் வைத்துக்கட்டியனுப்பிய பெண்ணை வெகு ஜாக்கிரதையாக எடுத்துக்கொண்டு வருகிற வழியில் பெரிய ஆபத்து நேர்ந்ததாம்; அதையும் ஜெயித்துக் கொண்டு எதிரியை க்ஷணப்பொழுதில் கொன்று வீழ்த்திவிட்டு வந்து சேர்ந்துவிட்டான். இந்த ஊரில் இருக்கும் சில இடங்களையெல்லாம் புதியதாய் மாற்றிக்கொண்டிருக்கிறார்களாம். ஆதலால் 'பழைய மாமூல் இடமாகிய இந்த இடத்திற்கே போனால் பிறகு உன்னைக்கொண்டு அவற்றை எல்லாம் காணலாம்' என்று சொல்லி வேறு ஒருரகஸிய வேலையார்த்தமாக எஜமான் என்னை இங்கு அனுப்பிவிட்டுத் தம்பியை நானிருந்த இரங்கூனுக்கு அனுப்பிவிட்டார். ஆதலால் நான் இங்கு வந்து சேர்ந்தேன். என்னை மறந்துவிட்டாயா? என் பெயர் வீரபத்திரன். இப்பொழுதாகிலும் நினைவுவந்ததா?'' என்றார்.

அதைக் கேட்ட கிழவி "அப்படியா! இரங்கூனிலிருந்தவரா தாங்கள்? தாங்கள் இரங்கூனிலிருப்பதாக எனக்குக் கேள்வியேயன்றி நான் பார்த்ததில்லை. தங்கள் திருநாமத்தை மாத்திரம் கேள்விப்பட்டிருக்கிறேன். அடிக்கடி தம்பி மாத்திரம் 'இரங்கூனிலிருக்கும் அண்ணன் சாமர்த்தியம் யாருக்கும் வராது. அவர் இரங்கூனில் தனியாக இருந்து செய்யும் காரியம் இங்கு நூற்றுக்கணக்கிலிருக்கும் எங்களாலும் செய்யமுடியாது' என்று வாய்க்கு ஒருதரம் சொல்வார். அவர் சொன்னதுபோலவே உங்கள் காரியவாதித்தனம் நன்றாய் முகத்தில் ஜொலிக்கின்றது. சரி; நீங்கள் முன்னால் எழுந்து ஸ்னானபானாதிகளைப் பார்த்துக்கொள்ளுங்கள்'' என்றாள். உடனே வந்தவர் "எனக்கு வழியிலேயே பசி எடுத்துக்கொண்டது. நான் உதயத்திற்கே ஒரு ஊரில் வயிறு நிறைய சிற்றுண்டிகள் சாப்பிட்டுவிட்டேன். ஆதலால் இப்போது எனக்குப் பசி இல்லை. நான் இன்னும் சற்றுநேரம் கழித்துச் சாப்பிடுகிறேன். நான் இப்போது ஒரு முக்கியமான ரகஸிய சமாசாரம் கொண்டு வந்திருக்கிறேன். அதற்கு இந்த வீடு தகுந்ததாயிருந்தால் சொல். நேராக இங்கேயே கொண்டு வைத்துவிடுகிறேன். இல்லையேல், நமது ரகஸிய இடத்தில் எதையாவது முன்னால் தெரிவி. நான் ஊரிலிருந்து வரும்போது பேஷான முதல்தரமான பச்சைக்கிளியைப் பிடித்துக்

கொண்டு வந்திருக்கிறேன். அதை ஒருவித தந்திரத்தினல் வேறு இடத்தில் வைத்துவிட்டு வந்திருக்கிறேன். இங்கு சரியான இடம் இல்லாவிட்டால் என்ன செய்வதென்ற முன்ஜாக்கிரதையோடு என் ஆள் ஒருவனைக் காவல் வைத்துவிட்டு வந்தேன். சீக்கிரம் சொல். அதிகநேரம் அங்கு விடக்கூடாது" என்றார். உடனே கிழவி வெகு சந்தோஷமும் அன்பும் ததும்பிய குரலோடு பேசத்தொடங்கி "அப்படியா! தாங்கள் இந்த எல்லைக்கு வரும்போதே ஒரு காரியத்தை ஜெயித்துக்கொண்டு தானே வந்திருக்கிறீர்கள். இதுதான் காரிய வாதிக்கு அடையாளம். சரி. நீர் அந்தக் கிளியை இங்கே வைத்திருக்க இடம் கிடையாது. இப்போது கொண்டுவந்து ராத்திரிவரையில் இங்கு வைத்திருந்து ராத்திரி புறப்பட்டு நமது முக்கியமான இடத்தைக் காட்டுகிறேன். அங்கு கொண்டு வைத்துவிடலாம்" என்றாள். அதைக்கேட்ட வீரபத்திரன் மெத்த சந்தோஷத்தோடு "சரி. பாட்டி! நான் சென்று இதோ அந்தக் கிளிக்கூண்டை எடுத்துக்கொண்டு வருகிறேன். அதற்குள் இடத்தை ஒழித்துவிடுங்கள்!" என்று கூறிக் கொண்டே தன் கையில் கொண்டுவந்த மூட்டையை அங்கு வைத்து விட்டு எழுந்து வெளியில் சென்றுவிட்டான். கிழவி உள்ளே சென்று ஏதோ வேலையில் தன் கவனத்தைச் செலுத்தினள். வெளியில் சென்ற வீரபத்திரன் சற்றுநேரத்தில் திரும்பி ஒரு பெரிய பீரோவை ஒரு கட்டை வண்டியில் வைத்துக்கொண்டு வந்து சேர்ந்தான். அதற் குள் கிழவி வீதியில் வந்து பார்த்து "இதென்ன பெரிய பீரோ வைக் கொண்டுவந்தீரே! கிளி இதற்குள்ளா இருக்கின்றது?" என்று வியப்போடு கேட்டாள். அதைக்கேட்ட வீரபத்திரன் நகைத்துக் கொண்டே வேலையாட்களை பீரோவை உள்ளே வைத்துவிட்டுப் போகச்சொல்ல, அவர்கள் அங்ஙனமே செய்துவிட்டுப் போய்விட்டார் கள். பிறகு வீரபத்திரன் வீதிக்கதவைத் தாளிட்டுக்கொண்டு உள்ளேசென்று வெகு உல்லாஸத்தோடு பேசத்தொடங்கி "என்ன பாட்டி! எனக்கு உங்களைப்போல அவ்வளவு தந்திரமாய் வாழையிலை யில் வைத்துக் கட்டத் தெரியாவிட்டாலும், ஏதோ என் மூளைக்குத் தோன்றியவாறு செய்திருக்கிறேன். இதுவும் நல்லதல்லவா?

கிழவி:—உங்கள் யுக்தி வெகு அற்புதமாயிருப்பதை நோக்கியே அங்ஙனம் வினவினேன். பேஷ்! வெகு புத்திசாலித்தன மாயிருக்கிறது.

182827

அதிருக்கட்டும். இந்தக் கிளியை எந்த இடத்தில் எப்படி பிடித்தீர்? அதைக் கேட்க மறந்துவிட்டேனே அதைச் சொல்லும்.

வீரபத்திரன்:—பாட்டீ! அதை நீங்கள் கேட்கமறந்து விட்டாலும் நானே சொல்லாமலிருப்பேனு? இதோ சொல்லிவிடுகிறேன் நான் நேற்று புறப்பட்டு இந்த ஊருக்கு ரயிலில் வரும்போது இடையில் ஒரு ஸ்டேஷனில் வண்டி ஏதோ மிஷன் கெட்டுவிட்டதனல் நின்றுவிட்டது. அப்போது நான் வண்டியை விட்டுக் காற்றுக்காக கிழே இறங்கினேன். அப்போது நல்ல நிசி வேளையாகையால் எங்கும் ஒரே இருள் மயமாக சூழ்ந்திருந்தது. நான் அங்கு கொஞ்சதூரம் சுற்றுமுற்றும் உலாவினேன். அப்போது அங்கு கொஞ்சதூரத்தில் விளக்கு வெளிச்சம் தெரிந்தது. நான் அது என்னவென்று பார்ப்போம் என்று அந்த திக்கை நோக்கி நடந்தேன். அந்த வெளிச்சம் அருகிலிருப்பது போலத் தெரிந்ததேயன்றி போகப் போக வழி மாளவே இல்லை. என்னேடு கூடவிருந்த வேலைக்காரனை அழைத்துக்கொண்டு நான் அங்குப் போய்ப் பார்க்கவேண்டுமென்று சென்றேன். அவ்விடத்தை யடைந்ததும் அங்கு வெள்ளை வெளேலென்ற கட்டிடம் ஒன்று தெரிந்தது. அதற்குள் என்ன விருக்கிறதென்று பார்க்கும்பொருட்டு உள்ளே சென்றேன். அங்கு சிறிய தோட்டம் ஒன்று தெரிந்தது. அந்தத் தோட்டத்தில் ஒரு பெண் வெகு அழகாயிருந்தாள். அவள் அங்கு உட்கார்ந்து பல வாறுய்த் தனக்குள் என்னவோ எண்ணி, எண்ணிக் கண்ணீர் விட்டுக்கலங்கி வாய்விட்டும் சில வார்த்தைகள் சொல்லிவிட்டாள். அதாவது "ஆ! நான் என்ன பெண்பிறந்தேன்! என்னைப்போல அபாக்கியவதிகள் இந்த உலகத்திலேயே இருக்கமாட்டார்கள். பிறந்ததுமுதல் 16-வயது வரையில் ஒரு துன்பமும் அனுபவியாத என்னை ஒரேமட்டாய்த் துன்பக்கடலிலேயே ஆழ்த்திவிட்டதே என்ன செய்வேன்? ஐயோ! இந்த மாமி, நாத்தியின் கொடுமைகளை என்னுல் சகிக்கமுடியவில்லையே. என்னை மணந்த மணவாளனே என்னைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லையே. அந்தத் துயரம் போதாதென்று என்னை மாமி முதலியோரும் கண்டு பேசி, ஏசி, நகைத்தும், அடித்தும் உபத்திரவம் செய்யவேண்டுமா? ஆ! என் ஆவி இவ்விதம் எமனுலகத்திற்கும் இவ்விடத்திற்கும் ஊசலாடுவதைவிட எமனு

லகத்திற்கே போய்விடலாகாதா! ஐயோ! என்னை இந்தப் பாவிகள் அழைத்து வந்தபிறகு என் பிறந்த வீட்டாரின் தகவல் ஒன்றுமே தெரியவில்லையே. அவர்களெல்லாம் உயிரோடு க்ஷேமமா யிருக்கின்றார்களோ அல்லது இறந்துதான் விட்டார்களோ தெரியவில்லை. ஹா! நான் எதைவேண்டி அழுவேன்? அம்மா! அப்பா! உங்களை நான் பார்த்து எத்தனை யுகங்களாயிற்று. ஐயோ! பாவி இனியான் உங்களை மறுமுறை எப்போது காண்பேன்? இந்தப் படுபாவிகள் உங்கள் பெயரெடுத்தாலும் வெட்டிவிடுவார்கள்போல விருக்கின்றதே! ஐயோ! நீங்கள் பெற்றபாசம் விடாமல் பார்க்கவந்தும் இந்தக் கிராதகர்கள் உங்கள் கண்ணில் என்னைக் காட்டாமல் மறைத்து உங்களையும் வயிறெறியச் செய்து கண்டபடி திட்டி ஓட்டிவிட்டார்களே. அதை நினைத்தால் என் உயிர் பறந்துவிடும்போல விருக்கிறதே. ஆ! நான் இனி இந்த ஜென்மத்தை எதற்காக வைத்திருப்பது? என்னுயகருக்கு அருகமில்லாத இந்தக்கட்டை எதற்கு இருப்பது? இனி இதை அரை வினாடிகூடச் சுமப்பது வியர்த்தந்தான். இதற்கு இந்த இரவோடு செலவு கொடுத்தனுப்பிவிட வேண்டியதுதான். இத்தனைநாள் சுமந்து வார்த்தை கேட்டதெல்லாம் போதும். இன்றோடு அவைகளை விட்டுவிட்டு இந்தக் கிணற்றில் விழுந்து உயிரை விட்டுவிடுவதே சரி" என்று பலவாறுப் பேசியதை நான் கேட்டிருந்தேன். எனக்கு என்ன செய்வது, எப்படி அந்தப் பெண்ணை நாம் கைப்பற்றுவது, என்ன உபாயம் செய்து நாம் அவளை அழைத்துப்போவது என்பதான கலக்கம் என் மனதில் தோன்றி மறைவதற்குள் அந்தப்பெண் திடீரென்று கிணற்றில் விழுந்துவிட்டாள். உடனே எனக்கு ஒரு யோசனை தோன்றியது. நான் திடீரென்று கிணற்றில் குதித்து அவளை மேலே எடுத்து அரைநொடியில் அவள் மூக்கில் என் கையிலிருந்த திராவகத்தை வைத்துவிட்டேன். உடனே அவள் கிணற்றில் விழுந்த அதிர்ச்சியால் ப்ரக்ஞையற்று விட்டாள். அப்புறம் நான் அவளை எப்படி இங்கு கொண்டுவந்து சேர்ப்பது என்று யோசனை செய்தேன். பிறகு இவ்விதம் தோன்றியது. என்னுடன் கூடவந்த வேலைக்காரனிடம் அவளை ஒப்பித்துவிட்டு, அந்த வீட்டுத் தெருக்கதவை இந்தப்பெண் வரும்போது திறந்துகொண்டுவந்தமையால், அது திறந்தே இருந்ததாகையால், நான் உள்ளே போனேன். அங்கு கூடத்தில் பெரிய அழகான

பீரோ ஒன்று முன்னால் காணப்பட்டது. அது பூட்டி இருந்தமையால் அதை அவ்விடத்திலேயே ஏதேனும் ஓசை செய்தால் அங்கு உள்ளே தூங்குகிறவர்கள் விழித்துக்கொள்ளப் போகிறார்களே என்ற எண்ணத்தினால் அதை வீதிக்குக்கொண்டுபோக எடுத்துப்பார்த்தேன். ஒருவனால் தூக்க முடியாமல் போயிற்றாகையால், நான் உடனே ஓசை செய்யாமல் வீதிக்கு வந்து அந்தப்பெண்ணைத் தனியாய் விடுத்து என் வேலைக்காரனை அழைத்துக்கொண்டுவந்து மெல்ல இருவருமாய் அந்த பீரோவை வீதிக்குக் கொண்டு வந்து சேர்த்து என் கையிலிருந்த சாவியின் உதவியால் அதைத் திறந்துவிட்டேன். அதற்குள் நிறைய இங்கிலீஷ் புஸ்தகங்களும் சில துணிகளும் இருந்தன. நமக்கு வேண்டியது எதுவுமில்லையாதலால் நான் அவற்றை எல்லாம் வெளியில் எடுத்து எறிந்துவிட்டு பீரோவின் உள்ளே இருக்கும் தட்டு (பலகை)களை எல்லாம் எடுத்துவிட்டு அதில் இருந்த சில துணிகளை மெத்தென்று அந்த பீரோவில்போட்டு அந்தப்பெண்ணை அதில் படுக்கவைத்து மேலே கதவைப் பூட்டிவிட்டு கதவின் சாவிபோடும் இடத்திற்குப் பக்கத்தில் மூன்றுவிரல் நுழையும் அகலம் சிறிய சந்துசெய்துவிட்டு, அந்தப்பெண்ணின் முகத்திற்கு நேரேயுள்ள பக்கத்திலும் அவ்வாறே துளைசெய்துவிட்டு நாங்களிருவரும் அந்த பீரோவை எடுத்துக் கொண்டு நடந்துவந்து ஸ்டேஷனையடைந்தோம். அப்போதும் வண்டி ஸரியாயாகவில்லையாயினும் பீரோவை ரயிலில் எடுத்துச்செல்ல சாத்யப்படாதென்று கருதி நான் முன் உட்கார்ந்திருந்த வண்டியில் இன்னொரு ஆளையும் மூட்டையையும் விட்டுச்சென்றிருந்தேன். அவனையும் அழைத்துக்கொண்டு, நேரே கொஞ்ச தூரத்திற்கு நடந்து வந்தோம். அங்கு வண்டிச்சாவடி யொன்று காணப்பட்டது. அதில் கட்டை வண்டியொன்றைப்பேசி அவனுக்கு 15 ரூபாய் கூலி தருவதாகச் சொல்லி பீரோவை அதில் வைத்துவிட்டு நாங்களும் மெல்ல உட்கார்ந்தோம். அவன் மெல்ல இரவெல்லாம் இழுத்து பொழுதுவிடிந்ததும், இத்தனை நேரமாய்விட்டது, இந்த ஊர் வந்துசேருவதற்கு. நான் ஒரு விநாடி கூடப் பசி பொறுக்க முடியாதவன். எனக்கு வழியில் ஓரூரில் விற்ற இடியாப்பம், தோசை, இட்டிலி, உருண்டை, காப்பி முதலியவற்றை வாங்கி எல்லோரும் வயிறு நிறைய உண்டு பிறகு வண்டியை விட்டோம். நேராக வண்டியை இங்கு கொண்டுவருவதற்குப் பார்த்

தேன். பிறகு நீ இங்கே இருக்கிறாயோ அல்லது இன்னும் எங்கேயாவது போயிருக்கிறாயோ என்ற யோசனையால் "முன்னால் நாம் போய்ப் பார்த்துவிட்டு வருவோம் அப்புறம் இங்கு கொண்டுவருவோம்" என்று யோசித்து அந்த வண்டியை என் ஆளின்வசம் ஒப்பித்துவிட்டு நான் வீட்டைப் பார்த்துவருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்தேன். நீயு மிருந்தாய். உடனேசென்று இதோ எடுத்துவந்தேன். அந்த ஆள்க ளுக்குவேறு அலுவலிருப்பதால், அவர்களை யனுப்பிவிட்டேன். இந்த பீரோவை ராத்திரியே அங்கு கொண்டு வைத்துவிடவேண்டும். இங்கு பத்திரக் குறைவுதான்" என்று வெகு உல்லாஸமாய்க் கூறினான்.

அதைக் கேட்ட கிழவி முற்றிலும் வியந்து அபரிமிதமான ஆச்சரியக் குறியோடு மூக்கில் விரலை வைத்துக்கொண்டு "ஆஹா! என்ன சூரத்தனம்! என்ன வீரத்தனம்! உங்களுடைய வீரத் தன்மையை யறிந்தேதான் உங்களுக்கு நாமம் வீரபத்திரர் என்று வைத்திருக்கிறார்கள். பேஷ்! வெகு தந்திரம். வெகு சாமர்த்யம். இவ்விதம் யோசனையாய்ச் செய்வதற்கு யாரால் முடியும்? நீர் ஒருவர் தான் தைரியசாலி, புத்திசாலி" என்று வெகுவாய்ப் புகழ்ந்து கூறி "அந்தப்பெண்ணை வெளியில் எடுக்கலாமா? எடுத்துக்காற்றாடவிட்டால் நலமன்றோ? இனி உள்ளே எதற்கு இருப்பது?" என்றாள்.

வீரபத்:—ஆ! அவளை இந்த இடத்தில் வெளியில் எடுக்கவே கூடாது. அவள் ஒருகால் தெளிந்துகொண்டாலும் அவளுக்குக் கிணற்றில் விழுந்த நினைவே இருக்குமேயன்றி வேறு ஒன்றும் தெரியாது. ஆகையால் அதற்குள்ளிருப்பதுதான் தகும். ஏனெனில் இந்த பீரோவும் இடுக்கு முடங்காயிருப்பதால் கிணறுபோலவே தென்படுமாகையால் அங்கேயே இருக்கட்டும் வெளிகிளப்பவே கூடாதுஎன்று கூறினார்.

கிழவி:—உமக்குத் தெரியாத யோசனை இனி உலகத்தில் உண்டா! எல்லாம் கற்றவர் நீர். சரி. அவளுக்குத் தான் ஆகாரம் எதுவும் தேவையில்லை. நீர் இனியாகிலும் சாப்பிடவேண்டாமா— என்றாள்.

வீர:—நான்தான் சொன்னேனே? வழியில் வயிறுகிழிய வாங்கித் தின்றுவிட்டேன், அதனால் என் விழியும் பிதுங்கிவிட்டது. இன்னும் என் வயிறு குழிவிழவில்லையே. இதற்குள்ளா மேன்மேலும் குழி

யில் கொட்டுவதுபோலப் பொழிவது? அதோடு என் வயிற்றிற்கு அழிவுதான் ஏற்படும். பிறகு உங்களுக்கு என்னால் பழி உண்டாகிவிடும். நீங்கள் கழியூன்றியபடி விழிக்க வேண்டியதுதான் அப்புறம் என் பெண்சாதி பிள்ளைகள் விழுந்து அழ வேண்டியதுதான். பீரோவிலிருக்கும் பெண் வந்த வழியோடு சென்று நம்மெல்லோருக்கும் அழியாப் புகழைத் தேடிவைத்து விடுவாள். ஆதலால் எனக்கு சாப்பாடே வேண்டாம். நீங்கள் பேசாமலிருங்கள். எனக்குப் பசி எடுத்தால் நானே கேட்டு உண்பேன். அதைப் பற்றி சந்தேகம் வேண்டாம். நான் முதலில் சென்று ஸ்நானம் செய்துவிட்டு வருகிறேன். வீதிக் கதவைத் திறக்காதே. அது சாத்தியே இருக்கட்டும்'' என்று கூறிவிட்டு உள்ளே சென்றான். கிழவியும் தன் வேலையைக் கவனிக்க உள்ளே சென்றாள்.

அந்தத் தருணம் வீதிக்கதவை யாரோ பலமாகத் தட்டும் சத்தம் கேட்டது. கிழவி வீரபத்திரனிடம் வந்து, ''ஐயா! வீதிக்கதவை யாரோ தட்டுகின்றார்கள். திறக்கட்டுமா?'' என்றாள். அதைக் கேட்ட வீரபத்திரன் சற்று யோசித்துப் பேசத்தொடங்கி ''பாட்டி! இங்கு யாராவது வழக்கமாய் வந்து கதவைத் தட்டுகிறதுண்டோ அல்லது இப்போது தட்டுவது யாராவது வெளி மனிதர்களாயிருக்குமா?'' என்றான்.

கிழவி:—இங்கு அடிக்கடி யாரும் வரமாட்டார்கள். எப்பவாவது ஒருவேளை நம்முடைய வேலையாட்கள் வந்து விசாரித்துவிட்டுப் போவது தான் வழக்கம். இப்போது இடிப்பது யாரோ கதவைத்திறந்து பார்த்தால் தான் தெரியும். நீங்கள் திறக்கவேண்டாம் என்று கூறியதால் கேட்கிறேன். என்ன செய்வது?''— என்றாள்.

வீரப:—நம்முடைய ஆள்களாக விருந்தால் பாதகமில்லை. வேறு அன்னியர் யாராகிலும் வந்திருந்தால் பீரோவின் ரகஸியம் தெரிந்து விட்டால் என்ன செய்வது? அதற்குத்தான் யோசிக்கிறேன். சரி நீ ஒன்றுசெய். நம்முடைய எஜமானர் அறை இருக்கின்றதல்லவா, அதனைத் திறந்துவிடு. இந்த பீரோவை அந்த அறையில் வைத்து விட்டு நானும் அதில் இருக்கிறேன். நீ கதவை வெளியில் பூட்டி விட்டு நான் இங்குவந்த செய்தியே தெரியாதபடி நடந்துகொண்டு எப்போதும்போல விருந்து கதவை திறந்துவிடு. ஏனெனில் இப்போது

கதவை இடிப்பவர் வெளியாரானாலும் பாதகமில்லை. நம்முடையவரா னாலும் சந்தோஷந்தான். யாருக்கானாலும் நான் இருப்பது தெரிய வேண்டாம். அப்படித்தான் செய்ய வேண்டும். என்ன சொல்லு கின்றாய்?—என்றான்.

அதைக்கேட்ட கிழவி "ஐயா! நீர் சொல்லும் யோசனை வெகு தந்திரமாய்த்தானிருக்கிறது. எஜமான் அறையின் திறவுகோல் என் வச மிருப்பதில்லையே. அது எஜமான் கையிலேயேதான் இருக்கின்ற வழக்கம். அந்த அறையைத் திறப்பது அசாத்தியத்திலும் அசாத் யமாயிற்றே. அது ஆகாத காரியமல்லவா! என்னசெய்வது?" என்று அனுதாபத்தோடு கூறினாள். அதைக்கேட்ட வீரபத்திரன் "பாட்டி! கதவை இடிப்பவரென்னவோ பலமாக இடிப்பதைப் பார்த் தால் தாமதிக்க நேரமில்லை. ஆகையால் இப்போது நாம் யோசித் துக்கொண்டிருந்தால் காரியம் கெட்டுவிடும். ஆபத்திற்குப் பாப மில்லை என்று கூறுவார்கள். நாம் வீதியிலிருப்பது யார் என்பதை யறியாமல் தவிக்கிறோம். ஆகையால் நான் எஜமான் அறைக் கதவை எப்படியாகிலும் திறந்துவிடுகிறேன். பிறகு எப்போதும்போல வெளியில் தாளிடும்படி செய்துவிடுகிறேன். ஒருகால் நாம் செய்தி ருக்கும் ரகஸியத்தை யாராகிலும் அறிந்துகொண்டால் அதுவும் எஜமானுக்குக் கஷ்டந்தானே. நாம் பயப்படாமல் கதவைத் திறந்து விட்டு வந்த மனிதர்கள் நம்முடைய ஆள்களாகவில்லாமல் யாராவது வழிபோக்கராகவோ, அந்நியராகவோ இருந்தால், நம்முடைய கெட்ட காலபயனால் அந்தப்பெண்ணுக்கு மயக்கம் தெளிந்துவிட்டால் பிறகு நம்கதி என்னவாகும்? எதற்கும் முன் ஜாக்கிரதை வேண்டும்" என்று கூறியவாறு சரேலென்று எழுந்துவந்து வேறு வேஷ்டி கட்டிக் கொண்டு எஜமான் அறையின் பூட்டை உடைக்கப் போகையில் கிழவி தடுத்து "ஐயா! எஜமான் என்னைத் திட்டினால் என்ன செய்வேன்?" என்றாள். அதற்கு வீரபத்திரன் "பாட்டி! அதற்கு நான் ஜவாப்தாரியாக விருக்கும்போது நீ பயப்பட வேண்டாம். எஜமான் நான் செய்யும் காரியத்திற்குப் பதிலே சொல்ல மாட்டார்" என்று கூறிக்கொண்டே பூட்டை க்ஷணத்தில் உடைத்து, கதவைத் திறந்துவிட்டு, கிழவியின் உதவியைக்கொண்டு பீரோவை மெல்ல நகர்த்திக்கொண்டு வந்து அந்த உள்ளே கிடத்திவிட்டு தானும்

உள்ளே சென்று கதவை உள்பக்கம் சாத்திவிட்டு, கிழவியை வேறு பூட்டினுல் கதவை பூட்டிவிடச் செய்து யார் வெளியில் வந்திருப்பது என்று கவனித்திருந்தான். கிழவியும் உடனே கதவைப் பூட்டிக் கொண்டு தூங்கி எழுந்தவள் போலப் பாசாங்கு செய்த வண்ணம் வீதியை நோக்கி 'யாரது வெறுமை கதவைப் பிளப்பது! எழவெடுத்த வீட்டில் சற்று படுத்து உறங்க ஆசையில்லை. யாராகிலும் வந்து பிராணனை வாங்குகின்றுர்கள்'' என்று கூறியவண்ணம் கதவருகில் சென்றுள்.

அதற்குள் வீதிக்கதவை பலமாக டக் டக் டக் என்று தட்டியவாறு கெட்டியாகக் கூச்சலிட்டு, வீட்டில் யார்? வீட்டில் யார் ? என்று கேட்டவண்ணம் இடித்தார்கள், உடனே கிழவி கதவைத்திறந்து விட்டதும், வீதியில் இரண்டு போலீஸ் ஜெவான்களும், ஒரு வேலையாளும், ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும் உள்ளே நின்ற கிழவியை உருட்டி விழித்துப் பார்த்தார்கள். அந்தப் பார்வையையும், நிற்கும் போலீஸ்காரர்களையும் கண்டது தான் கிழவியின் குடல் நடுங்கவாரம்பித்தது. அவளை யறியாமலேயே அவள் சிரம் சுழலவாரம்பித்தது. தான் சற்றும் எதிர்பாரா விதமாய்ப் போலீஸ் உத்தியோகஸ்தர்களைக் கண்டதும் அவள்பாடு இன்னதென்று விவரிக்கயியலாத வேதனையாகி விட்டது. பிறகு மெல்ல கிழவி தான் பயப்படுவதாகக் காட்டிக்கொள்ளக் கூடாதென்ற நினைவை அப்போதே பெற்றவளாகையால் அவள் எதையும் கவனியாதவள்போலப் பேசத்தொடங்கி "யாரைய்யா அது? தூக்கத்தில் வந்து கிளப்பிவிட்டீர்கள்? என்ன காரியமைய்யா?'' என்று வெறுப்போடு கேட்டாள். அதைக்கேட்ட ஜெவான்கள் கிண்டலாக நகைத்துக்கொண்டே "என்ன பாட்டி! ரொம்ப அலக்ஷியமாய்ப் பேசுகின்றுயே? அதெல்லாம் தூர கட்டிவைத்து விட்டு நாங்கள் கேட்டதற்கு பதில்சொல். இங்கு சற்றுமுன் ஒரு வண்டியில் பெரியபீரோ ஒன்றை எடுத்துக்கொண்டு ஒரு ஆள் உள்ளே வந்தாரே அவரை நாங்கள் அரெஸ்ட்டு செய்ய வந்திருக்கிறேம். எங்கேயவர்?'' என்றுர்கள். அந்த வார்த்தையைக் கேட்டதும் கிழவி தலையில் இடி விழுந்ததுபோலாய்விட்டது. 'அவன் பீரோவைக் கொண்டுவந்ததையும் அதில் ரகஸியமிருக்கின்றதென்பதையும் இவர்கள்எப்படி அறிந்தார்கள். ஐயோ! இதென்ன ஆபத்து? நல்லவேளையாய் தெய்வம் நமக்குமுன்

யோசனை காட்டியதில் சற்று நலமேயாயிற்று' என்றுபலவாறுய் யோசித் தவண்ணம் அலக்ஷியமாய்ப் பேசத்தொடங்கி "என்னஐயா இது, விளையாடுகிறீர்களே! என் வீட்டில் என்னைத்தவிர வேறுயாரும் கிடையாது இங்கு வருவாருமில்லை போவாருமில்லை. எனக்கு இந்தப் பாழும் இடிந்த வீட்டில் காலத்தைப் போக்கிவந்தால் இந்தவிதத் தொல்லையும் வந்து நேரவேண்டுமோ? நான் தான் சிவனே என்று ஏகாங்கியாகவிருக்கிறேன். இங்கு சற்றுமுன் யாரும் வரவுமில்லை. ஒன்றுமில்லை. நீங்கள் வீடுமாருட்டமாய் வந்துவிட்டீர்களோ என்னவோ? இந்த வீட்டில் யாருமில்லை போங்கள்!" என்றாள். இதைக்கேட்ட ஜெவான்கள் முன்னிலும் அதிகமாக நகைத்து "பாட்டி! உனக்கு இந்த வீட்டில் யாரும் தான் வரவில்லையே, அதற்கு நீயேன் பயப்படுகின்றாய். நாங்கள் தகவலை யறியாது வரவில்லை. எல்லா விஷயமும் எங்களுக்குத் தெரியும். நேற்று ராத்திரி ரயில்வண்டி புறப்பட்டு மெட்ராஸிற்கு வரும் வழியில் ஒரு ஸ்டேஷனில் மிஷின் ஏதோ கெட்டு வண்டி ஓடாமல் நின்றிருந்த சமயம் பெரிய கூச்சல் ஒன்று கிளம்பி ஸ்டேஷனில் பெருத்த அமளியாகிவிட்டது. அதாவது ரயில் ஸ்டேஷனுக்குப் பக்கத்திலேயே அந்த ஊருமிருப்பதால் அங்கு அருகிலுள்ள ஒரு வீட்டில் யாரோ கள்ளர்கள் புகுந்து ஒரு பீரோவை எடுத்துக்கொண்டு போய்விட்டார்களாம். பிறகு அந்த வீட்டுக்காரர்கள் கண் விழித்துப் பார்த்தவுடன் வீடு முற்றும் தேடிப் பார்த்ததில் அந்த வீட்டுப் பெண் ஒருத்தியைக் காணவில்லையாம். பீரோவிலிருந்த சாமான்களை எல்லாம் வாரி வீதியில் எறிந்து வைத்திருந்ததாம். உடனே அவர்கள் போலீஸுக்குத் தெரிவிக்க ஓடிவந்தார்கள். ரயில் அப்போதும் போகாமலேயே இருந்தது. அப்போது பொழுது விடியும் சமயமாய்விட்டது. உடனே அவர்கள் ஸ்டேஷனில் வந்து அமளி செய்ததால் ஒரே கூட்டமாய்ச் சேர்ந்துவிட்டது. அச்சமயம் அங்குக் கூடியிருந்த வண்டிக்காரர்களில் சிலர் அவர்கள் தகவலை யறிந்துகொண்டு, "ஐயா! ராத்திரி நடுநிசியில் ஒரு பெரிய பீரோவை இருவர் எடுத்துக்கொண்டு இங்கு வந்து ஒரு கட்டை வண்டியை யமர்த்திக்கொண்டு அதில் பீரோவை வைத்து ஓட்டிக்கொண்டு போனார்கள். நாங்கள் அது திருட்டு சொத்து என்பதை யறியாமையால் சும்மா விருந்துவிட்

டோம். ஆனல் அவர்களோடு பெண்பிள்ளைகள் யாரும் வரவில்லை. நாங்கள் அப்போது நீங்கள் சொல்லும் அடையாளமுள்ள பீரோவைப் பார்த்தோம். அவர்களாகத்தான் இருக்கவேண்டும். அவர்கள் நுங்கம்பாக்கத்திற்கு வண்டியோட்ட வேண்டுமென்று சொல்லியது நன்ருக நினைவிருக்கின்றது. பாக்கியொன்றும் எங்களுக்குத் தெரியாது" என்று சொன்னர்கள். உடனே அவர்கள் எங்களுக்கு விவரம் கூற நாங்கள் பட்டினம் வரும் மார்க்கமாகவே வேருெரு வண்டியில் வந்தோம். கிட்டவரும் சமயம் வண்டிக்காரன் ஒருவன் அதே வழியாக எதிரில் வந்துகொண்டிருந்தான். அவனுகத்தான் இருக்கவேண்டும் என்ற எண்ணங்கொண்டு அதை அறிந்துகொள்ள வேண்டி வண்டிக்காரனை நோக்கி, என்னப்பா! பீரோவையும் எங்கள் மனிதர்களையும் ஜாக்கிரதையாய்க் கொண்டு சேர்த்துவிட்டாயா? உனக்குச் சரியான கூலியவர்கள் கொடுத்தார்களா?" என்று நாங்கள் தந்திரமாய்க் கேட்டதை அவன் அறியானுகையால், வெகு சந்தோஷமாகப் பேசத்தொடங்கி; "ஆ மவாராஜா! சரியான கூலியே கொடுத்தாங்க. எல்லாரையும் ஜாக்கிரதையாகக் கொண்டு விட்டு விட்டு வந்தேன்" என்றான். உடனே சரி இவன்தான் என்பதை பரிஷ்காரமாகத் தெரிந்துகொண்டு அவனை நல்லதனமாகவே "அப்பா! உனக்கு இன்னும் சில ரூபாய்கள் தருகிறேன். எங்களோடு கூடவந்து எங்களுக்கு வீட்டைக் காட்டிவிட்டு நீ போய்விடு" என்று கூறி அவன் கையில் 5 ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தோம். அவன் அளவற்ற மகிழ்ச்சியோடு வீட்டைக் காட்டிவிட்டு இதோ இப்போதுதான் போகிறுன். நாங்கள் இவ்வளவு தகவலோடு வந்திருக்கையில் நீ எங்களை ஏய்க்கப் பார்க்கிருயா? இதெல்லாம் இந்தப் போலீஸாரிடம் உதவாது: நாங்கள் வீட்டைச் சோதனைப் போடப் போகிறோம். வழியை விடு" என்று அதட்டியவாறு கூறியதைக்கேட்ட கிழவி இடியோசையைக் கேட்ட நாகம்போல் மயங்கி நின்றுவிட்டாள். அவர்கள் சொல்வதெல்லாம் உண்மையாகவே இருப்பதைக் கேட்க அவளுக்கு இன்னது செய்வதென்று தெரியாத விதமான மனக் குழப்பமும் கிலியும் எடுத்து வதைக்க வாரம்பித்துவிட்டது. அவள் தேகம் தானகவே திடும் திடும் என்று ஆடுகின்றது. இந்த ஆபத்திற்கு என்ன செய்வதென்று பலமான

யோசனை அவள் மூளையைக் குழப்புகின்றது. "போலீஸ் புலிகளோ 'வைத்தால் குடுமி சிரைத்தால் மொட்டை' என்பதுபோல அவர்கள் சோதனை போடவேண்டுமென்றால், தான் எவ்விதம் தடுத்துக்கூறியும் அதை அவர்கள் கேளாமல் சோதனை போட்டே தீருவார்களே, என்னசெய்வேன்? சோதனைபோட்டால் நமது ரகஸியம் தானாகவே தெரிந்துவிடும் பிறகு என்ன செய்வது?" என்று கிழவி பலவாறாக யோசித்து யோசித்து மறுமொழி கூறமாட்டாமல் தவித்துத் தண்ணீராயுருகியவண்ணம் நின்றாள். போலீசார் "என்ன பாட்டி பேசாமலிருக்கிறாய்? வழியைவிடு. உனக்குத்தான் பயமே இல்லையே. எதற்காக வழி மறித்து நிற்கவேண்டும்? உம். வழியை விடுகிறாயா? உன்னைத் தள்ளிக்கொண்டு போகட்டுமா?" என்று அதட்டினார்கள். அதைக்கேட்ட கிழவி முன்னிலுமதிகமான கிலியும் கலக்கமும் ஏற்பட்டு நெருப்பில் விழுந்த புழுவைப்போலத் துடித்தாள். உடனே கிழவி சடக்கென்று எதையோ எண்ணியவள்போல தன்னை நன்றாய்த் தேற்றிக்கொண்டு, "என்ன ஐயா! இந்தக் கிழட்டுப் பிணத்தோடு நீங்கள் விளையாடுகின்றீர்கள். எனக்கு ஒன்றும் தெரியாதென்று நான் லக்ஷந்தரம் சொல்லியும் நீங்கள் அதைக் காதில் வாங்காமல் வெறுமை நீங்கள் பேசுவதையே பேசுகின்றீர்களே. இங்கு மனிதரும் வரவில்லை? பீரோவும் கொண்டுவரவில்லை. வீண் வாதம் எதற்குச் செய்வது? இங்கு உங்களுக்குச் சோதனைப்போடுவதற்கு குட்டிச்சுவரும் கொல்லைவெளியு மிருக்கின்றது. அதை இங்கிருந்தே பார்த்து விட்டுப்போகலாகுமே? அதற்கு இத்தனை அமர்த்தல் எதற்கு? வீணாக என்னை வயிறெறியச்செய்யவேண்டாம். போங்களையா. இந்த வீட்டிற்கு இந்த இடத்தைத் தவிர வேறு இடம் கிடையாது. இங்கேயேதான் நான் உண்பது, உறங்குவது எல்லாம். ஆகையால் இதற்கு மேலெல்லாம் இடிந்துக் குவிந்துக்கிடக்கும் குட்டிச்சுவர்களும் செங்கல் காரைகளும் நிரம்பி இருக்கின்றன. அதை வேண்டுமானால் சோதனை போட்டுக்கொள்ளுங்கள்" என்று சொல்லிக்கொண்டே வழியைவிட்டு முடுக்காய்விலகினாள். அதற்குள் போலீஸ்காரர்கள், "பாட்டி! நீவெகு கெட்டிக்காரி என்பதைநாங்கள் நன்றாயறிவோமாகையால் எங்களிடத்தில் உன்சாமார்த்தியத்தை இன்னும் காட்டாதே. மரியாதையாய் அப்படி விலகிக்கொள்" என்று கூறிக்கொண்டே திடு திடு என்று எல்லோ

ரும் உள்ளே பிரவேசித்து அங்கு சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே சென்றார்கள்.

இவ்விடத்தில் நாம் நம்முடைய வாசகர்களுக்கு முக்கியமான ஒரு விஷயத்தை நினைப்பூட்டுவது அவசியமாதலால் அதைக் கூறுவோம். அதாவது வாழை இலைக்கட்டுக் கட்டியனுப்பியபோது நமது துப்பறியும் நிபுணரான ராஜாராம் நாயுடு அவர்கள் இந்த வீட்டை நாற்புறமும் சுற்றிச்சுற்றி வருகையில் வீதி நடைக்குப் பிறகு ஒரே இடிந்து விழுந்துக் கிடந்தக் குட்டிச்சுவரும் இருள்மயமாயிருக்கின்றதென்று பக்கத்திலிருந்த சந்து வழியாக கொஞ்சதூரம் சென்றபிறகு ஒரு அறை இருப்பதைக்கண்டு அவர் அதன் ஓட்டின்மீதில் ஏறியதாகச் சொன்னேமல்லவா? அங்கு விளக்கு வெளிச்சம் தெரிந்தவிடம் இரண்டாவது கட்டு என்பதை நமது வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள் என்று நம்புகிறேம், அந்த இரண்டாவது கட்டிற்கு அப்பால் உள்ள மூன்றுவது கட்டிலேயே வீரபத்திரன் பீரோவை வைத்துக்கொண்டு இருந்தானுகையால் அந்த இடம் இந்த இடிந்து கிடந்த குட்டிச்சுவர்களுக்கும் கட்டாந்தரைக்கும் சம்மந்தமில்லாத தனியிடமாகக் காணப்பட்டது. போலீஸார் இடிந்தபாகத்தை எல்லாம் பார்த்துவிட்டு கட்டிடமுள்ள விடத்திற்குப் போனார்கள். அங்கும் பார்த்தபின் மூன்றுவது கட்டையுமடைந்தார்கள். அங்கு பூட்டப்பட்டிருந்த அறையைக் கண்டதும் போலீஸார் தடைகட்டிய நாகம் போல அவ்விடத்திலேயே நின்று விட்டார்கள். உடனே ஒரு ஜெவான் கிழவியைக் கூவியழைத்து "ஏ பாட்டி! இந்த உள்ளைத் திற. இதைப் பார்க்க வேண்டும்" என்ருன். அதைக் கேட்ட கிழவி, அதுவரையில் அவள் வீதி பக்கமுள்ள நடையிலேயே இருந்தமையால் இவர்கள் எங்குச் சென்றார்கள் என்பதைக் கவனிக்கவில்லையாதலால், அவளைக் கூவியழைத்த பிறகே அவ்விடம் வந்தாள். வந்தவுடன் இவர்களைக்கண்டு "ஐயையோ! இதென்ன அக்கிரமம்! என் வீடு அதோடு முடிந்துவிட்டதே. பின் தெருவிலுள்ளவர்கள் வீடல்லவா இது! இந்த வீட்டின் சுவர் இடிந்து விட்டதால் அந்தபாகமும் இதோடு சேர்ந்திருக்கிறமாதிரியாக விருக்கின்றது. எனக்கு இந்தப் பாழும் வீடு இத்தனைபெரிது எதற்கு? என் தலைமேல் வைத்துக் கொளுத்திக்கொள்ளவா? என் கிழட்டுக் கட்டைக்கு அந்த நடைத்

திண்ணை போதாதா! ஐயோ! நீங்கள் வந்ததை அவர்களறிந்தால் என்னைக் கொன்றுவிடுவார்களே. இது என் வீடல்ல. நீங்கள் வாருங்கள்'' என்று ஓரே சாதனையாயும், தந்திரமாயும் கூச்சலிட்டுக் கூறி நின்றாள்.

இந்த வார்த்தையைக்கேட்ட போலீசார் பதில்சொல்ல ஒன்றும் சாத்தியப்படாதவர்களாய் அந்தக் கட்டிடத்தையும் இடிந்துகிடக்கும் குட்டிச்சுவற்றையும் மாறி மாறிப் பார்த்தார்கள். அவர்களுக்கும் சற்று சந்தேகமாகவே இருந்தது. இந்த இடம் ப்ரத்தியேகமாயிருக்கின்றது. அந்த இடமும் தனியாக விருக்கின்றதே. ஒருகால் கிழவி சொல்லுவது நிஜமாக விருக்குமோவென்று யோசித்துச் சற்றுநின்றார்கள். பின்னும் உடனே இந்தவீடு பின்தெருவின் வீடாக விருந்தால் பின்பக்கம் கதவு முதலியவை இருக்குமல்லவா என்று யோசித்தவண்ணம் பின்னும் சென்று பார்க்கலாயினர். அந்தபின்பக்கம் செல்லச் செல்ல, அது முன்பக்கத்துக்கட்டிடம் போலவே நடைத் திண்ணை வீதியில் கதவு முதலியது இருந்ததைக் கண்ட போலீஸார் ஒருகால் இது பின் தெருவின் வீடுதானோ என்று சந்தேகமடைந்து பின்னும் கிழவியைப் பார்த்து "ஏ பாட்டி! இது என்ன நிஜமாய்ப் பின் தெருவின் வீடா அல்லது எங்களை ஏய்க்க வேண்டித் தந்திரம் செய்கிறாயா? இது தனி வீடாகவிருந்தால் இந்த வீட்டுக்காரர்கள் எங்கே அதைக்கூறு'' என்று அதட்டிக் கேட்டார்கள். இதைக் கேட்டக் கிழவி இவர்கள் தாம் சொல்லியதைப் பற்றி சந்தேகமாகவே இருக்கிறார்களென்றதை நன்றாயுணர்ந்தாளாகையால் அவள் முன்னிலும் அதிகமான சாகஸம் செய்து கூறத்தொடங்கி "ஏனைய்யா! வீணாய் கிழட்டுப் பிணத்தோடு வம்பு பேசித் துன்பப்படுத்துகின்றீர்கள்? இந்த வீட்டுக்காரர்கள்நேற்றுதான் குழந்தைக்கு முடி இறக்கி பிரார்த்தனை செலுத்த திருப்பதிக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் வருகிற வரையில் வீட்டை என் வசம் விட்டுவிட்டுப் போயிருக்கின்றார்கள். வீட்டுக்காரர்கள் இல்லாத வேளையில் பொல்லாதகாலத்தின் தொல்லையா இப்படி நீங்கள் என்னை விறட்டிச் சொல்லாத வார்த்தைகளைச் சொல்லி, பல்லைக்காட்டி அல்லல் படுத்துகின்றீர்கள். வேண்டாமையா என் இழவை எடுக்க வேண்டா மய்யா. நாளைக்கோ மறுநாளோ வீட்டுக்காரர்கள் வந்து விடு

வார்கள். பிறகு நீங்கள் வந்து என்னவாவது செய்யுங்கள். இப்போது என்னை விட்டு விட்டால் போதும். உங்களுக்குப் புண்ணியமுண்டு. கிழப்பிணத்தோடு வாது செய்ய வேண்டாம். வீட்டுக்காரர்கள் வந்தால் நீங்கள் வந்துபோனதை யறிந்தால் என் தலைக்குத்தான் கொள்ளி வைப்பார்கள். எப்படி நாங்களில்லாத சமயத்தில் போலீஸாரை உள்ளே விட்டாய் என்று என்னைத் தானே ஐயா தெருவில் இழுப்பார்கள். உங்களுக்கென்ன வாட்டம் வந்தது? நீங்கள் நாளைக்கு வீட்டுக்காரர்கள் வந்தவுடன் வந்து உங்கள் சட்டத்தை எல்லாம் காட்டி, அட்டம் செலுத்தி, வீட்டை சோதனைபோட்டோ, இடித்தோ, வெட்ட வெளி யாக்கியோ விடுங்கள். பிறகு உங்களிஷ்டம். இந்தக்கிழட்டுப் பிணத்தின் திட்டம் வேண்டாம்; வாருங்கள். ஐயா! உங்களுக்கு அனேக வந்தனம். வெளியே வாருங்கள்.'' என்று வெகு அழுத்தமும் திருத்தமுமாய்க் கூறி அவர்களை உறுத்திப் பார்த்தாள்.

இந்த சாகசத்தைக் கேட்ட போலீஸார், அதற்கு மேல் எதுவும் பேசாமல் இன்ஸ்பெக்டர் முகத்தைப்பார்த்தார்கள். அப்போது இன்ஸ்பெக்டர் ஜெவான்களை விளித்து, ''அடேய்! நீங்கள் இப்போது இங்கு எதுவும் செய்ய வேண்டாம். ஒருகால் கிழவி சொல்வது நிஜமாக விருந்தால் நாம் இப்போது சோதனை போடுவது சட்ட விரோதமாகும். ஆகையால் நீங்கள் வீதிபக்கமும் கொல்லை பக்கமும் காவல் இருங்கள். நாளைக்கு வீட்டுக்காரர்கள் வந்தவுடன் சோதனை போடுவோம். அப்படி கிழவி சொல்லியது சுத்தப் பொய்யாக விருந்தால் கிழவியை உடனே பிடித்து அரெஸ்டு செய்து விடுவோம். பொய் சொல்லிய குற்றத்திற்காக தண்டனையும் ஏற்படும். ஆகையால் இப்போது நாம் வெளியில் போவோம் வாருங்கள்.'' என்று கூறிக்கிழவியை நோக்கி ''பாட்டி! உன் பேச்சை நம்பி நாங்கள் இப்போது சும்மா போகிறோம். நாளைக்காவது மறுநாளாவது வீட்டுக்காரர்கள் வராவிட்டால் உன் மண்டை கிழிந்து விடும். ஜாக்கிரதை. இந்த வீட்டைச் சுற்றிக்காவல் வைத்தே செல்கிறேன் பத்திரம்'' என்று கூறி வெளியே போய், வீதியில் வந்தவுடன் ஜெவான்களைக்கண்டு ''அடேய்! நீ இந்தப்பக்கத்தில் உஷாராய் பார்த்துக்கொள். அவனை அந்தப் பக்கம் அனுப்பு'' என்று சொல்லி விட்டு மற்ற எல்லா

ரும் போய் விட்டார்கள். அங்கு விட்டுச்சென்ற ஜெவான்களிருவரும் வீதியிலும் கொல்லையிலும் தமது வேலையைச் செய்யலாயினர்.

தனியாக விடப்பட்ட கிழவி கடைசியில் தனது சாகஸமே ஜெயித்ததை எண்ணி எண்ணி மட்டற்ற மனமகிழ்ச்சியும், பூரிப்புமடைந்து, அளவற்ற ஆநந்தத்தையடைந்தாள். என்றாலும், "இந்த போலீஸ் ஜெவான்கள் வீதியிலும் கொல்லையிலும் காவல் இருப்பதால், தான் அந்த பீரோவை எப்படி அந்த இடத்தைவிட்டுக் கிளப்புவது. அது தான் ஒரு பெரிய விஷனமாக விருக்கிறது. இந்தப் போலீஸ் புலிகள் காவல் வைத்து நாளை என்னைப் பிடிப்பதற்கு இவர்கள் கையில் நான் அகப்பட்டாலல்லவா இவர்கள் பிடிக்கப்போகிறார்கள். நானும் இரவோடிரவாய் இந்த வீட்டிலுள்ள சகல பொருள்களையும் இன்றிரவே காலிசெய்து மூட்டையாகக் கட்டிக்கொண்டு இந்த இடத்தை விட்டு நமது ரகஸிய இடத்திற்குப் போய்விட்டால், இந்தப் போலீஸாரல்ல, அவர்களைப் படைத்த பிரம்மதேவனல்ல; யார் வந்தாலும் பார்க்கமுடியாத பரம ரகஸியமான இடத்திற்குச் சென்ற பிறகு இவர்கள் இங்குவந்து என்னவாவது செய்துகொள்ளட்டும். நமக்கென்ன. நமது பேச்சாகிய பழம் தற்சமயம் நன்றாய்ப் பழுத்து விட்டது. இனி பயமில்லை" என்று பலவாறாய் யோசித்துக்கொண்டே வீதிக்கதவைத் தாளிட்டுக்கொண்டு வீரபத்திரனைப் பூட்டியிருந்த அறையண்டை வந்து மெல்ல பேசத்தொடங்கி, "ஐயா! இன்று நமக்கு திடீரென்று எதிர்பாராத விதமாய் வந்த ஆபத்தை என் தந்திரத்தால் தற்கால சாந்தியாய் நிவர்த்தி செய்திருக்கிறேன். எல்லாவற்றையும் தான் நீர் கேட்டுக்கொண்டே இருந்தீரல்லவா. என்ன விசித்திரமாய் உம்மைத் தொடர்ந்து வந்துவிட்டார்கள் பார்த்தீர்களா? நான் போலீஸார் வருவார்கள் என்று கனவிலும் கருதவில்லை. திடீரென்று வீதிக்கதவைத் திறந்ததும் எம கிங்கரர்கள்போல நின்றவர்களைக் கண்டதும் என் குடலே நடுங்கிவிட்டது. என்னவோ நற்காலத்தின் பயனே ஈசன் எனக்கு இவ்வித தந்திரமாகப் பேசப் புத்தியளித்து இந்தத் தடவை பிழைக்க வைத்தார். இனி பார்த்துக் கொள்வோம்." என்று கூறிக்கொண்டே அந்த அறைக்கதவைத் திறந்தாள். அந்த அறைக்குள்ளே தலைவிதியே என்று மூச்சுவிடாமல் பயந்துகொண்டு உட்கார்ந்திருந்த வீரபத்திரன் கிழவி கதவைத்



82827

திறந்ததும் வெளியே வந்து, "அம்மாடி, பாட்டி! உன்னால் இன்று வந்த கண்டத்தை மெல்லத்தப்பித்துக் கொண்டோம். நான் இன்று போலீஸாரிடம் அகப்பட்டுக்கொள்வது நிச்சயம் என்று உறுதியாய் எண்ணிவிட்டேன். உன் தந்திரத்தினாலல்லவா நாம் பிழைத்தது. பாட்டி! உலகத்தில் உன்னைப்போலத்தந்திரசாலியும், மந்திரி புத்தியுமுடைய பத்து பேர்கள் இருந்துவிட்டால் நம்போன்றவர்களுக்கு என்ன குறைவு இருக்கிறது? உன் ஒருத்தியாலேயே இவ்வுலகைக்கூட ஆளலாமே. பாட்டி! அவர்களைத் தந்திரமாய் நீ யனுப்பிவிட்டாய். இதற்குமேல் ஆக வேண்டிய வேலைகளை நான் யோசித்துவிட்டேன். அங்ஙனம் செய்யாவிட்டால் மறுபடி நாம் அவர்கள் கையில் சிக்குவது திண்ணம். ஆகையால் நாம் இனிமேல் என்ன செய்யவேண்டுமென்றால் இந்தக் கொல்லை பக்கம் காவலிருக்கிறானே அவன் எங்கு நிற்கிறான், என்ன செய்கிறான் என்பதை முதலில் கவனித்துக்கொண்டே இரு. இப்போது பொழுது அஸ்தமிக்கும் சமயமாய் விட்டது. இன்னும் சற்று நேரத்தில் நன்றாக இருட்டிவிடும். அப்போது நீ என்ன செய்கிறாய் தெரியுமா? இதோ நான் கொடுக்கும் சூரணத்தை நீ இப்போது அடுப்பு மூட்டி ரவைசேர்த்து பலகாரம் ஏதாவது செய்து அதில் தனியாகக் கொஞ்சம் எடுத்து வைத்துவிட்டு மிகுதியில் இந்தச் சூரணத்தைக் கலந்து அதை ஒரு இலையில் சுற்றி வைத்துவிட்டு கொல்லைப்பக்கமுள்ள வீதியில்போய் திண்ணையில்உட்கார்ந்திரு. அவன் எங்கிருக்கிறான்என்பதைக்கவனித்திரு. அவன் கொல்லைப்பக்கம்வரும்போது அவனிடம் நீ நிஜமான அன்புகாட்டிப்பேசுகின்றவள் போல நடித்து 'அப்பா! தம்பி! உனக்கென்ன சம்பளம்? எத்தனை குழந்தை' தெரியாதா? முதலியயோகக்ஷேமங்களைஎல்லாம் விசாரித்துக்கொண்டே அந்தப் பலகாரத்தைத் தின்னும்படி செய்துவிடு. அதில் தான் உன் சாமர்த்தியத்தைப் பார்க்கவேண்டும். அவன் அதைத் தின்றுவிட்டால் உடனே மயக்கமாய்விழுந்து சூரணத்தின் வீரியம் பூரணமாய்ப்பாய்ந்து தாரணியைமறந்து துயிலுபவன்போல்விழுந்துவிடுவான். உடனேநான் சென்று ஒரு வண்டியும் என்னுடைய கையாளையும் அழைத்து வந்துவிடுகின்றேன். இன்று வண்டியோடு இங்கு வந்தது தான் பிசகாய்விட்டது. ஆகையால் நமது வீட்டிற்குச் கொஞ்ச தூரத்தில் வண்டியை நிறுத்திவிட்டு, அவனுக்கு நிறைய சத்தத்தைக் கொடுத்து அனுப்பி

விட்டு நாம் நம்முடைய ஆளின் உதவியைக்கொண்டே பீரோவை அவ்விடத்தில் சேர்த்துவிடலாம். என்ன சொல்கிறாய். நான் சொல்வது சரியான யோசனை அல்லவா?'' என்றான்.

அதைக்கேட்ட கிழவி முற்றிலும் பூரித்து, புளகாங்கிதமடைந்து அந்த விஷயத்தைத்தெரிவிக்கும் ஒவ்வொரு பதத்தையும் ஆமோதித்தவளாய், பல்லைக்காட்டிப்பெரியதாய் நகைத்து ''ஐயா! உமது புத்தியின் விசாலமேவிசாலம். உமக்குத் தோன்றும் யோசனைக்கும் நிகர் உண்டோ? என்ன விசித்திரமாயும் வீரத் தன்மையாயும் தந்திரமாயும்யோசனைசொன்னீர்? பேஷ்; வெகுநன்றாயிருக்கிறது. அப்படியே செய்வோம். உமதிஷ்டப்படியே மருந்தைக் கொடும் பலகாரம் செய்துவிடுகிறேன்'' என்று வெகுவாய்ப் புகழ்ந்து ஸ்தோத்திரம் செய்து நின்றாள். உடனே வீரபத்திரன் தனது மூட்டையிலிருந்த மருந்தில் ஒரு சிடிகையளவு எடுத்துக் கிழவியிடம் கொடுக்க அவள் அதை வாங்கி எடுத்துக்கொண்டு உள்ளே சென்று அடுப்பைப்பற்ற வைத்து ரவை சேர்த்த உப்புமா செய்து வீரபத்திரன் அளித்த மருந்தை சிறிதளவு உப்புமாவில் கலந்து அதைத்தனியாக வைத்துவிட்டுக்கொல்லைப் பக்கமுள்ள வீதியில் வந்து திண்ணையில், 'அப்பாடா. உஸ்;' என்று பெருமூச்சுடன் உட்கார்ந்தாள். அவள் கண்கள் நாலாபக்கத்திலும் சென்று சுழன்றுகொண்டே இருந்தன. அங்குக் காவலிருந்த சேவகன் வீதியில் கொஞ்ச தூரத்திற்கப்பால் நின்றபடியே இந்த வீட்டைக் கவனித்துக் கொண்டிருந்தான். இதையறிந்த கிழவி அவனை இங்கு எப்படி வரவழைப்பது என்று சற்று யோசனைசெய்து பின் எழுந்து வீதிக் கதவை சாத்திக்கொண்டு மெல்ல எங்கேயோ போகிறவள்போல வீதியில் நின்ற வண்டியை யழைத்துப் பேசினால் அவன் சந்தேகித்து இங்கு வருவான் என்ற யோசனையால் கிழவி அங்குப் போய்க்கொண்டிருந்த ஒரு வண்டிக்காரனை யழைத்து அவனிடம் வீண்வம்புப் பேச்செல்லாம் பேசத்தொடங்கி அவனை வீதியில் நிற்கவைத்து, வண்டி யோட்டுவதில் லாபமுண்டா.? வண்டி என்ன விலை? குதிரை என்ன விலை? உனக்குக் கட்டுப்படியாகின்றதா, என்பதை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்ததை தூரவிருந்து கவனித்துக்கொண்டிருந்த சேவகன் கிழவி வண்டி பேசி அதில் என்னவோ எடுத்துக்கொண்டு போகப் போகிறாள் என்பதாக

எண்ணி மெல்ல அந்த இடத்தைவிட்டு நகர்ந்து இங்குவந்து சேர்ந்தான். கிழவி அவன் வருவதை தூரத்திலிருந்தே கண்டவுடன் 'இந்தத் தந்திரமும் பலித்துவிட்டது' என்ற மகிழ்ச்சியோடு வண்டிக்காரனைப் பார்த்து "அப்பா! நீ வேலைக்காரன் உன்னோடு சும்மா நான் பேசிக்கொண்டிருந்தால் உனக்குக் கூலி வருமாப்பா? நீ போய் வா. நானும் போகிறேன்" என்று கூறியவனை யனுப்பிவிட்டுத் திரும்பினாள். அதற்குள் அந்தஜெவான் அவ்விடத்திற்குவந்துநின்றான். அவனைக்கண்ட கிழவி நயமாகப் பேசத்தொடங்கி "என்ன தம்பி! கால் கடுக்க ஏன் நிற்கிறாய்? இப்படி உட்காரேன். எனக்கும் பொழுது போய்த் தொலையவில்லை. சற்று இப்படியாவது உட்கார்ந்து பொழுதைத் துலைக்கலாமென்று வந்தேன். எத்தனை காலந்தான் இவ்விதம் உலகில் இருந்து இம்சைப்பட வேண்டுமோ தெரியவில்லை. நேற்றுப் பிறந்த குழந்தைகளெல்லாம் இறந்து விடுகின்றன. இந்தப் பாவியின் உயிர் மாத்திரம் எல்லாரையும் விழுங்கிவிட்டுத்தான் அசையாமல் இருக்கின்றதே. இந்தப் பாபத்திற்கு என்ன செய்வேன்? தம்பி! என் வரலாற்றை நினைத்தால் நெருப்பில்லாமலேயே என் மனம் பாகாய் உருகுகின்றது. எனக்கு ஆதியில் எதிலும் குறைச்சல் என்பதே தெரியாதப்பா. வீடும், வாசலும், மக்களும், மணாளனும், காசும், பணமும், கல்லுகல்லாய் நகையும், பட்டுபட்டாய்த் துணியும், ஏராளமாயிருந்தன. எனக்குக் கட்டி மிஞ்சி வழியில் போகிறவர்களுக்கும் வாரி இறைத்தேன். இப்போது என்னைப் பார்த்தால், நான் அவ்விதம் செய்தவள் என்று சொல்லுவார்களா. அப்போது என்னை உன்னத ஸ்திதியில் வைத்த ஈசனே இப்போது என்னைக் கேவலமான நிலைமையில் வைத்து விட்டார். எல்லாம் என்கால வித்தியாசமேயன்றி வேறல்ல." என்றுகூறி கண்ணீரை வடித்தாள்.

இதை எல்லாம் கேட்ட ஜெவான் உள்மர்மத்தை யறியாதவனுகையால், அவளுடைய பரிதாபகரமான நிலைமையைக்காண மனம் சகியாதவனாய், "பாட்டி! உன்வரலாறு மிகவும் பரிதாபகரமாக விருக்கிறதே. உன்பணம், மற்ற மக்கள் எல்லாம் எப்படியாயின? யார் அழித்து விட்டார்கள்? உன் பணமெல்லாம் எங்கே இருக்கிறது? உன் பிள்ளை குட்டிகளெல்லாம் எங்கே?" என்று வெகு உருக்கத்தோடு கேட்டான்.

கிழவி:—அப்பா! எனக்கு வாயினுல் என் சேதியைச் சொல்வ தற்குக்கூடக் கஷ்டமாக விருக்கிறது. நாங்களிருந்த தேசம் ஐதரா பாத். அங்கு எங்களுக்கு ஏராளமான செல்வமிருந்தது. எனக்கு அப்போது ஒரு பெண்ணும் ஒரு பிள்ளையுமிருந்தார்கள். அந்த ஐதரா பாத்தில் வெள்ளம் வந்ததே அது உனக்கும் தெரிந்திருக்கலாம். அந்தப் பாழும் வெள்ளம் என் மக்கள், மனை, கணவன், பணம் எல்லாவற்றையும் அடித்துக்கொண்டு போய்விட்டது. அந்தச் சமயம் நான் கர்ப்பமாயிருந்தேன்; பிரசவிக்க என் தாய்வீடு சென்றிருந்தேன். பிரஸவிக்கு முன்னமேயே எனக்கு இந்த விபரீதச்செய்தி எட்டிவிட் டது. எனக்கு துக்கம் தாங்காமல் அலறியடித்து அழுது புரண்டதில் வயிற்றிலிருந்த சிசுவும் செத்துப்போய் பிறகு வெகு பாதைப்பட்டு விழுந்துவிட்டது. பாவி நான் வரும்போது என் குழந்தைகளை என்னுேடு கூட்டிக்கொண்டு போவதாகச் சொன்னதற்கு என் மாமி யாரும் கணவரும் அனுப்பமாட்டேனென்று சொல்லிவிட்டதன் பேரில் நான் வந்து சேர்ந்தேன். வெள்ளத்தில் சகல சொத்தும் போய் விட்டன. அவைகளெல்லாம் யார் கையில் அகப்பட்டதோ, யார் எடுத்துக் கொண்டு போனுர்களோ? என் அருமை மனிதர் களின் சவம் கூடக் கிடைக்கவில்லை என்று தேடிப் பார்த் தவர்கள் சொல்லிவிட்டார்கள். நான் அதே விசனத்தில் என் தேகத்தையே நான் வெறுத்துவிட்டு அந்த ஊரைவிட்டு உடனே வெளிக்கிளம்பி என் உடம்பிலிருந்த நகைகளை எல்லாம் ஒவ்வொன்ருய் விற்று பலதேசங்களிலும் யாத்திரை செய்துகொண்டு கடைசியில் இந்தப்பாழும் பட்டினத்திற்கு வந்துசேர்ந்து 10 வருஷமாயிற்று. இந்த வீட்டிலுள்ள மனிதர்கள் வெகு நல்லவர்கள். அவர்கள் தான் என்னைக் காப்பாற்றுகிருர்களென்று கூறவேண்டும். என்மேல் வெகு பிரியத்தோடு என்னை கண்மணியைக் காக்கும் இமையைப்போல பாது காத்து வருகிருர்கள். நான் அவர்களிடமுள்ள நல்ல குணத்தின் பிடிப்பினுல் என்மனம் அவர்களைவிட்டுப் பிரிய மனமற்றவளாய் இங் கேயே நின்றுவிட்டேன். என் காலமும் முக்கால்வாசி யாய்விட்டது. உயிர்தான் போகமாட்டே னென்கின்றது. என்செய்வேன்? என் வர லாறு எப்படி இருக்கின்றது பார்த்தாயா?" - என்று கண்ணீரைக் காணுருய் ஓடவிட்ட வண்ணம் கூறினுள்.

இந்தச் சாகஸ வார்த்தையைக்கேட்ட சேவகன் இயற்கையிலேயே கோழை மனமுடையவனுகையால் அந்த வரலாற்றை முற்றும் நம்பி அவன் தானும் வருந்தியவண்ணம் "பாட்டி! உன் வரலாறு கேட்க வெகு வருத்தமாக விருக்கின்றது. ஐயோ! பாவம். உன் பிழைப்பு கடைசியில் இப்படியா ஆகவேண்டும்? உனக்குச் சமையல் முதலியது யார் செய்துப் போடுவார்கள்?" என்ருன்.

கிழவி:—எனக்கு யார் செய்தாலும் சரிப்படாது. எனக்கு நானே செய்து சாப்பிட்டால்தான் பிடிக்கும். மற்றவர்களெல்லாம் அனுசாரமாக வேலை செய்வார்கள். கிழட்டுப் பிணத்திற்கு சாகுகிற காலத்தில் அந்த அனுசாரமெல்லாம் எதற்கு என்று நானே செய்துதான் சாப்பிடுகின்ற வழக்கம். ஆனுல் நாலு மனிதர் கூடவிருந்து உண்பதே வழக்கமாய் விட்டபடியால் நேற்று முதல் எனக்கு அன்னம் தண்ணீரே பிடிக்கவில்லை. நான்என் கையினுல் சமையல் செய்துக் கொண்டாலும் சாப்பிடும்போது அவர்களும் என்கூடத்தான் சாப்பிடுவார்கள். நேற்று அவர்கள் ஊருக்குப் போய்விட்டபடியால் எனக்குப் பசியே எடுக்கவில்லை; சாப்பிடவே பிடிக்கவில்லை. நேற்று முழுதும் சுத்தப்பட்டினிதான். இன்று அன்னம் வேண்டிருக்காமையால், ரவை உப்புமா செய்து வைத்தேன் காலையிலேயே. இன்னுமதைச் சாப்பிடப் பிடிக்கவில்லை. பிசாசுபோலத் தனியாகச் சாப்பிட வெகு கஷ்டமாக விருக்கிறது. தம்பி! நீ எந்த ஜாதியைச் சேர்ந்தவன்?"

ஜேவான்:—நான் முதலியார் ஜாதியைச் சேர்ந்தவன். சுத்த சைவன். எதுவானுல் என்ன? இந்தப் போலீஸ் உத்தியோகத்தைக் கைப்பிடித்த பிறகு எதுவும் கெட்டுத்தான் போகின்றது. என்ன செய்யலாம்? எல்லாம் ஜாண் வயிறுக்காகத்தானே பாட்டி! உலகமே இருப்பது.

கிழவி:—அப்பா! நீ முதலியார் ஜாதி, சுத்த சைவன் என்பதைக் கேட்க எனக்கு மிகவும் சந்தோஷமாக விருக்கிறது. நீ கொஞ்சம் உப்புமாவு சாப்பிட வாப்பா. நானும் உன் பொருட்டாகிலும் கொஞ்சம் சாப்பிடுகிறேன். எழுந்திரு தம்பி!—என்று வெகு உருக்கமாய்க் கனிந்த பார்வையோடு கூறினுள்.

அதைக் கேட்ட ஜெவான் சிரித்தவண்ணம் பேசத்தொடங்கி "பாட்டி! எனக்குப் பசியே இல்லையே. நான் மூன்று மணிக்குத்தான் ஓட்டலில் சிற்றுண்டி வாங்கி வயிறுநிறையச் சாப்பிட்டேன். இப்போது வயிற்றில் இடமே இல்லை. என்ன செய்வேன்?" என்றான்.

கிழவி எப்படியாவது அவனை இன்று சாப்பிடும்படி செய்ய வேண்டுவது அவளுடைய முக்கிய காரியமாகையால் முன்னிலுமதிக மான உருக்கத்தோடு பேசத்தொடங்கி "தம்பி! உன்னாலாகிலும் சிறி தளவு ஆகாரம் புசிக்கலாம் என்று எண்ணினேன். அதுவுமில்லாமல் போய்விட்டது. சற்று முன் நீங்கள் வீணை கேஸ் ஒன்று கொண்டு வந்து என்னை விரட்டியதோடு என் ஆவியே கிளம்பிவிட்டது போலாய் விட்டது. அதெல்லாம் இப்போதுதான் சற்று நீங்கிப் பசி எடுப் பதுபோல விருக்கிறது. நீ சாப்பிட்டால் உன்கூட நானும் சிறிதளவு சாப்பிடுகின்றேன். இல்லையேல் நேற்றைப் போலவே பட்டினியே கிடக்கின்றேன். அதனால் எனக்கு வருத்தமே இல்லை" என்றாள்.

ஜெவான்:—"பாட்டி! என்பாடு இப்போது தர்ம சங்கடமாகவிருக் கிறது. நான் சாதாரணமாய் இந்த நிலைமையில் உன்னோடு உட் கார்ந்து பேசுவதே எங்கள் சட்டத்திற்கு விரோதமான காரியம். இன்னும் நான் வேண்டா வெறுப்பாய் உனக்காகக் கொஞ்சம் சாப் பிடலாம் என்று எண்ணி உள்ளே வந்தால் அது இன்னும் பெரிய குற்றமாகும். நான் ஏதோ உளவு இருக்கும் மாதிரியாக எங்கள் தலை வர் எண்ணிவிடுவார். ஆகையால் நான் உள்ளே வரமுடியாது. நீ பட்டினியாகக் கிடக்கின்றாயே. அதற்காகவாவது நான் இந்த விடத்தி லிருந்தபடியே சிறிதளவு புசிக்கின்றேன். இப்போது நன்றாயிருட்டி விட்டபடியால் நீயும் இங்கேயே உட்கார்ந்து சாப்பிடலாம்"—என்றான். கிழவி இதைக்!கேட்டவுடன் தனது மூன்றாவது தந்திரமும் பலித்து விட்டதை எண்ணி அளவற்ற சந்தோஷத்தோடு உள்ளே சென்று ஒரு செம்பில் ஜலமும் மற்றொரு கையில் தான் முன்னதாகவே தயா ரித்து வைத்திருந்த மருந்து சேர்த்த உப்புமாவையும் எடுத்துக் கொண்டு வந்து வீதியில் இருந்த ஜெவான் கையில் ஜலம்விட்டு உப்பு மாவையும் கொடுத்து மறுபடி உள்ளே சென்று தனக்கும் ஓர் இலை யில் எடுத்துக்கொண்டு வந்து முன் உட்கார்ந்திருந்தது போலவே உட்கார்ந்து அதைமெல்ல அவனையுமுண்பித்துத் தானும் உண்டாள்.

பிறகு இருவரும் தண்ணீர் குடித்துவிட்டு முன்போலவே பேசலாயினர்.

கிழவி:—தம்பி! உனக்கு எத்தனை குழந்தைகள்? என்ன சம்பளம்? உன் ஊர் எது?—என்று வெகு பக்ஷமாகக் கேட்டாள்.

ஜேவான்:—எனக்கு ஒரு பெண் குழந்தைதா னிருக்கிறது. எங்கள் ஊர் இதேதான். எனக்குச் சம்பளம் 35-ரூபாய் வருகின்றது. ஏதோ அதை வைத்துக்கொண்டு காலட்சேபம் செய்கிறோம். பாட்டி! உன் உப்புமா பலே பேஷாக விருக்கிறது. தின்கத்தின்கத் திகட்டவில்லை. எங்கள் வீட்டில் செய்வது நன்றாக விருப்பதே கிடையாது. என் ஜென்மத்தில் இந்த உப்புமாவு மாதிரி நான் சாப்பிட்டதே இல்லை. பாட்டி என்னை யறியாமல் தூக்கம் வருகின்றதே! என்ன செய்வேன்! எங்கள் எஜமான் பார்த்தால் வந்துவிட்டது மோசம். நீங்கள் உள்ளே சென்று ஒரு மிளகும் கொஞ்சம் ஜலமும் கொண்டு வாருங்கள். அதைக் கண்ணில் உறைத்துப் போட்டுக்கொண்டால் தூக்கம் விலகிவிடும்.

இதைக்கேட்ட கிழவி "அப்படியா இதோகொண்டு வருகிறேன்" என்று சொல்லி உள்ளே நழுவிவிட்டாள். தன்னுடைய தந்திரம் முழுமையும் பலித்துவிட்டதென்று மகிழ்ச்சியோடு உள்ளே சென்றவள் மிளகு கொண்டுவந்து கொடுத்தால் ஒருகால் தூக்கம் மாறி சுகமாகிவிடும். நாம் கொஞ்சநாழிகை தாமதம் செய்துவிட்டுப்பிறகு போய் பார்ப்போம் என்று பத்துநிமிஷம் கழித்து மிளகை எடுத்துக்கொண்டு வீதியில் வந்து பார்த்தாள். ஜெவான் திண்ணையில் படுத்து மயங்கி விட்டதை உணர்ந்த கிழவி ஆநந்த நிர்த்தனம் செய்து அகமகிழ்ந்து கொண்டே வீரபத்திரனிருந்த அறைக்குப் போய். "ஐயா! நம்முடைய தந்திரமெல்லாம் பலித்துவிட்டது. அந்த ஜெவான் மயங்கிவிட்டான். இரவும் வந்து இருண்டுவிட்டது. இனி நீர் வெளிக்கிளம்பி வேலையை முடிக்கலாம்" என்றாள்.

உடனே வீரபத்திரன் வெளியில் வந்து வீதிபக்கம் பார்த்தான். எங்கும் இருள்மயமா யிருந்ததைக்கண்டு மெல்ல வெளியில் சென்றுவிட்டான். சென்றவன் கொஞ்சநேரத்தில் ஒருகட்டை வண்டியையும் தனது கையாட்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தான். அதற்குள் கிழவி வீரபத்திரனைப்பார்த்து "ஐயா! போலீஸார்கள் நாளை

யும் மறுநாளும் பார்த்து, பிறகு என்னை கைதுசெய்யப் போவதாக சொல்லிச் சென்றார்களே. அவ்வண்ணமே நாளை மறுநாளில் இங்கு வந்து பூட்டை உடைத்து எஜமான் அறையைச் சோதனைசெய்தால் பெருத்த மோசம்வந்து சேரும். ஆகையால் இந்த ஆபத்துக்காலத் தை எஜமானுக்குச்சொல்லி விடுவோம். நாம் முன்ஜாக்கிரதையாய், எஜமானின் பெட்டி, பேழை முதலியவைகளையும் இப்போதே அப்புறப் படுத்தி விடுவதுதான் நலம். அந்த வண்டியிலேயே எஜமான் பெட்டிகளையும் எடுத்துப்போட்டு விடுங்கள்" என்றாள். உடனே வீரபத்திரனும், அவனுடைய ஆட்களும், பீரோவையும், இன்னும் சில பெட்டி, பேழை, மூட்டை முதலிய எல்லாவற்றையும் வண்டியில் ஏற்றிவிட்டுத் தானும் கிழவியும், வண்டியிலேயே உட்கார்ந்தார்கள். வீரபத்திரனோடு கூடவந்த வேலைக்காரர்களும் வண்டிக்காரனுக்குச் சகாயமாய் வண்டியைத் தள்ளிக்கொண்டு பின்னால் செல்ல, இரவு பத்து மணிக்கே வண்டி புறப்பட்டு விட்டது. கிழவி காட்டிய வழியே வண்டி சென்றுகொண்டே இருக்கின்றது. நல்ல நடுநிசி வேளையுமாய் விட்டது. பிறகு கிழவி, வீரபத்திரனைப் பார்த்து, "ஐயா! இன்னும் கொஞ்சம் தூரம்தான் இருக்கிறது. வண்டியைவிட்டுச் சாமானை இறக்கிவிடலாம்" என்று கூறினாள். உடனே வீரபத்திரன் வண்டியை நிறுத்தச் சொல்லித் தானும் இறங்கி, வண்டியிலிருந்தவைகளை எல்லாம் கீழே இறக்கி, வண்டிக்காரனுக்குச் சத்தத்தைக் கொடுத்தனுப்பிவிட்டு, பீரோவை தன் ஆட்களின் தலைமேல் ஏற்றி அதன் மேல் சில பெட்டிகளை வைத்துவிட்டுத் தான் சிலவற்றையும், கிழவி சிலவற்றையுமாக எடுத்துக்கொண்டு, கிழவி காட்டிச்சென்ற வழியே சென்றார்கள். கால்நாழிகை நேரம் சென்றது. எங்கும் ஒரே மரமும் செடியுமாய்க் காணப்பட்ட பெருத்த தோப்புக்குள்ளே கிழவி புகுந்தாள். அவளைப் பின்பற்றியே மற்றவரும் சென்றார்கள். கிழவி தோட்டத்திற்குள் நெடுந்தூரம் சென்று அங்குக் காணப்பட்ட ஓர் பெரிய மாளிகைபோல விருந்த கட்டிடத்தின் முன்பக்கத்து வாயிலையடைந்ததும் அங்கு கத்தி, கட்டாரி முதலியவற்றை கையில் பிடித்துக்கொண்டு, வரிசை வாரியாக பக்கத்திற்கு நால்வராய் நின்றிருந்த பாராக்காரர்கள் கிழவியைக் கண்டு உற்று நோக்கியபின், பாட்டி! வாருங்கள் வாருங்கள். ஏது இவ்வளவுதூரம் வந்து விட்டீர்கள்? என்று கூறிக்கொண்டே இருக்கையில் மற்றவர்களைக் கண்டதும் அங்கு இருந்த நாய் பலமாக குரைக்க வாரம்பித்தது. அதையறிந்த காவல் காப்போரும் பின்னால் இருந்தவர்களைக் கண்டவுடன் "பாட்டி! என்ன பெரிய குடும்பத்தோடு வந்திருக்கிறீர்கள்? அவர்களெல்லாம் யார்? என்றார்கள். உடனே கிழவி "நமது வீரபத்திர முதலியார் ரங்கூனிலிருந்தவரை நீங்களும் மறந்து விட்டீர்களா? என்றாள்.

அதைக் கேட்ட காவலாளிகள் "ஓ! அண்ணாத்தையா! வரப்போகிறதாக இங்கு 10 நாளாய் சொல்லிக்கொண்டே இருந்தார்கள். வாருங்கள். பார்த்து வெகுகாலமாய் விட்டபடியால் சடக்கென்று தெரியவில்லை" என்று வெகு மரியாதையாயும் அன்பாகவும் கூறி வந்தனமளித்து, வழிகாட்டி உள்ளே அழைத்தார்கள். வீரபத்திரனும் வெகு சந்தோஷத்தோடு "தம்பிமார்களே! சுகமா?" என்று கூறியவண்ணம் உள்ளே சென்றான். அங்குச் சென்றதும் எல்லோரும் வந்து ஒன்றுகூடி வீரபத்திரனை வணங்கி க்ஷேமலாபங்களை விசாரித்து "அண்ணே! நீங்கள் மாத்திரம் அலுக்காமல் சலுக்காமல் 30 வருஷத்திற்கு மேலாய் ரங்கூனிலேயே இருந்து விட்டீர்களே! எங்களை யழைத்துக்கொள்ளும்படி பலதரங்களில் கடிதங்கள் எழுதியும் பேசாது இருந்துவிட்டீர்களே" என்று பலவாறாக உபசரித்துப் பேசவாரம்பித்தார்கள். அதை எல்லாம் கேட்ட வீரபத்திரன் வெகு சந்தோஷத்தோடு என்னருமைத் தம்பிமார்களே! நான் சொல்ப ஆள்களை வைத்துக்கொண்டு எவ்வளவு வேலைசெய்து வந்தேன். இன்னும் ஆள்கள் அதிகமாகச் சேகரித்துக்கொண்டு கும்பு கூட்டிக்கொண்டிருந்தால் வேலைகெட்டுவிடும். எப்படியாவது சந்தேகம் ஏற்பட்டு நம்மை நசுக்கிவிடுவார்கள். அதை எல்லாம் எண்ணியே நான் அப்படியே பேசாது இருந்துவிட்டேன். நான் எவ்வளவோ தந்திரமாய் வேலை செய்து வருகையிலேயே இன்று ஓர் பெரிய ஆபத்து வந்துவிட்டது. பாட்டியின் தந்திரத்தினாலும் என்னுடைய தந்திரத்தினாலும் அந்த ஆபத்திலிருந்து தப்பி நீந்தியடித்துக் கொண்டு வந்துவிட்டோம்." என்றான்.

அதைக்கேட்ட எல்லோரும் வியந்து ஆ! ஆபத்தா? என்ன ஆபத்து? யாருக்கு நேர்ந்தது? என்றார்கள்.

உடனே கிழவி வீரபத்திரன் தன்னிடம் கூறிய வரலாறு, போலீஸார் வந்தது, அவர்கள் தெரிவித்தது, தான் தந்திரம் செய்தது முதல் இவ்விடம் வந்து சேர்ந்ததுவரையில் ஸவிஸ்தாரமாகச் சொல்லி முடித்தாள்.

அதைக்கேட்ட எல்லோரும் ஆச்சரிய மயமாய் மாறிப்போய் "ஆஹா! என்ன தந்திரம் செய்திருக்கிறீர்கள்? அண்ணாத்தையின் பெயரையும், புகழையும், சாமர்த்தியத்தையும் இங்கு சின்ன எஜமான், பெரிய எஜமான் எல்லோரும் அடிக்கடி புகழ்ந்து கூறுவதை நாங்கள் கேட்டிருக்கிறோம். அதை நிதர்சனமாய்க் காட்டியும்விட்டார்" என்று கூறியவண்ணம் உள்பக்கத்துக் கட்டின்கதவு தாளிட்டு இருந்ததைத் திறக்கச்செய்து அங்கிருந்தவர்களையும் எழுப்பிவிட்டார்கள். உடனே கிழவி ஏனப்பா தூங்குகின்றவர்களை எல்லாம் எழுப்புகிறீர்கள்? காலையில் பார்த்துக்கொண்டால் போகின்றது. நீங்கள்

இரவில் தூக்கமே கொள்வதில்லையா? இவ்விதம் பாரா செய்துகொண்டிருக்கிறீர்களே? என்றாள்.

காவலர்:—என்ன செய்வது பாட்டி! நமக்கு எஜமான் இட்டிருக்கும் கட்டளைப்படி செய்தே தீரவேண்டாமா? நாங்கள் இரவில் கண்விழிப்பவர்கள். பகலில் விழித்திருப்பவர்கள் வேறுஇருக்கிறார்கள் அவர்கள் இரவில் நன்றாய்த் தூங்குவது, நாங்கள் பகலில் நன்றாய்த் தூங்குவது இப்படியாகவே மாற்றிக்கொண்டிருக்கிறோம். பாட்டி!நீங்களெல்லோரும் சாப்பிட்டீர்களா இல்லையா, என்ன செய்தீர்கள்?"—என்று கேட்டார்கள்.

அதைக்கேட்ட கிழவி எதையோ எண்ணியவள்போலச் சரேலென்று பேசத் தொடங்கி "ஆ! மறந்து விட்டேனே. நான் சாப்பிட்டாய்விட்டது. இன்னும் ஊரிலிருந்து வந்தது முதல் வீரபத்திரர் சாப்பிடவே யில்லை யாகையால் முதலில், நடு நிசியானாலும் பாதகமில்லை, உள்ளே ஏதாவது இருந்தால் அவரை உண்பியுங்கள்" என்று ஆத்திரத்தோடு கூறினாள்.

அக்கணமே அந்தக் காவலாளிகள் அங்குள்ள குமாஸ்தா வசம் சேதியைக் கூறிவிட்டு தாம் வீதியில் காவல்செய்யச் சென்றுவிட்டார்கள். உடனே குமாஸ்தா வீரபத்திரனை உள்ளே அழைக்க அவன் நடுநிசியில் எனக்கு எது உண்டாலும் ஜரிக்காமல் திண்டாடித் திணரவேண்டிவரும். மேலும் நான் இரவில் சாதம் சாப்பிடுகின்ற வழக்கமே வைத்துக்கொள்ளவில்லை. ஒருவேளை தான் கெட்டியாகாரம். மற்ற வேளையில் நீராகாரம்தான் சாப்பிடுவது. இரவில் பால், பழம் முதலியவைதான் சாப்பிடும் வழக்கம். ஆகையால் எனக்கு சாப்பாடு எதுவும் வேண்டுவதில்லை. பாலும் இந்த நடுராத்திரியில் ஜீரணமாவது வெகு கஷ்டமாகிவிடும். ஆகையால் நான் காலையில் எழுந்தவுடன் ஆகாரம் பார்த்துக்கொள்கிறேன். முதலில் இப்போது பத்திரமான ஓர் இடம் தேவை. அதில் இந்தப் பீரோவிலுள்ள பெண்ணை எடுத்துவிடவேண்டும். அவள் எவ்விதமும் தப்பியோட வழி இல்லாமல் ஒரு பந்தோபஸ்தான அறையைத் திறவுங்கள்" என்றான்.

உடனே குமாஸ்தா தன்னிடமுள்ள கொத்து சாவியை அவனிடம் கொடுத்து "ஐயா! இந்தப் பங்களாவில் எஜமானர் அறையின் சாவியைத்தவிர மற்ற அறைகளின் சாவிகளெல்லாம் இதோ இதிலிருக்கின்றன. உமக்கு எந்த அறை பிடித்தமோ அதில் வைக்கலாம்." என்று கூறினான்.

வீரபத்:—சரி அப்படியே செய்கிறேன். மணி இப்போது 3-க்கு மேலிருக்கும்போலத் தோன்றுகின்றது. ஆகையால் எல்லோரும் படுத்துக்கொள்ளுங்கள். நான் எந்த அறை சரியானதென்று பார்த்து

அந்தப்பெண்ணை அதில் விட்டுவிட்டு நான் வருகிறேன்'' என்று கூறிய வண்ணம் சில அறைகளைத் திறந்து பார்த்தான். அதில் தனக்கு ஒன்றும் சரிப்படாமையால் நெடுகப் பார்த்துக்கொண்டே சென்று கடைசியில் ஓரறை சரிப்பட்டதால் பீரோவில் இருந்த பெண்ணை அதைவிட்டு மெல்ல எடுத்து உள்ளே கொண்டு விட்டான். அப்போதும் அவள் மயங்கிக் கிடந்தாளேயன்றி தெளியவில்லை. அவளை விட்டுக்கதவை வெளிப்புறம் தாளிட்டுக் கொண்டு வீரபத்திரன் வெளியே வந்துவிட்டான். எல்லோரும் பிறகு சற்று நேரம் பேசிக்கொண்டிருந்த பின் நித்திரையில் ஆழ்ந்தார்கள்.

உதயமானதும் வழக்கம்போல எல்லோரும் எழுந்து தத்தம் அலுவல்களைக் கவனிக்கச் சென்றனர். வீரபத்திரனும் எழுந்து, முன்னிரவு முடிவு செய்திருந்தபடியே அந்தப்பெண்ணை அன்று தானே அழைத்துக்கொண்டு போய் எஜமானிடம் விட்டுவிட்டு வருவதற்காக அவளை விட்டுப் பூட்டிய அறையைத்திறந்தான். அவ்வளவு தான்; அவன்பாடு இடிவிழுந்துவிட்டது. கூடவிருந்தவர்களும் திடுக்கிட்டார்கள். அறை காலியாக இருப்பதைக் கண்டவுடன் "ஆ! அந்த பெண்ணெங்கே? அவளை யார் தப்பியோடவிட்டது?'' என்று பல்லைக் கடித்துக்கொண்டு, கண்கள் சிவக்க வீரபத்திரன் கர்ஜனை செய்கிறான். அவனுக்கு அப்போது நரசிம்மாவதாரம் வந்து விட்டது போல அவ்வளவுகோபம் பொங்குகின்றது. உண்மையை உரைக்காவிட்டால் பாருங்கள்; என்ன செய்கிறேன் என்று குதிக்கின்றான். அவள் எப்படி வெளியே போயிருப்பாள். நான் பூட்டிய கதவு பூட்டியபடி இருக்கின்றதே. அவளழகைக் கண்டு இச்சை கொண்டே எந்தப் பயல்களோ ரகஸியவேலை செய்திருக்கிறார்கள். எல்லோரும் வாருங்கள் வெளியே'' என்று கூச்சலிட்டான்.

இந்த அமர்க்களத்தைக் கண்ட மற்ற எல்லோரும் நடு நடுங்கி விட்டார்கள். எஜமானே! நாங்கள் ஒரு பாபமுமறியோம். எங்களுக்கு ஒன்றுமே தெரியாதென்று வீரபத்திரன் காலில் வந்துவிழுந்தார்கள். அதற்குள் வீரபத்திரன் எல்லோரையும் விட்டு அந்த இடம் முற்றும் பார்க்கச்செய்தான். எங்கு பார்த்தாலும் அவளைக்காணவில்லை. உடனே வீரபத்திரன் குமாஸ்தாவை நோக்கி "அப்பா! இங்கு வழக்கமாயுள்ள எல்லா மனிதர்களும் இருக்கின்றார்களா'' பார்த்துவா என்றான். உடனே குமாஸ்தா அங்கு வழக்கமாகவிருக்கும் எல்லா வேலைக்காரர்களையும் சரிவர இருக்கிறார்களா என்று பார்வையிட்டுவந்தான். எல்லோரும் அவரவர்கள் தொழிலைச் செய்துகொண்டே இருக்கின்றார்கள்'' எனக் கூறினான்.

இதைக் கேட்ட வீரபத்திரனுக்கு அடங்கா ஆத்திரம் பொங்கி எழுந்தது. அந்த அறையை ஒருமுறை பல்லைக் கடித்துக்

கொண்டே சுற்றிப் பார்த்தான். அங்கு அவள் வெளியே போவ தற்கான சின்னங்கள் எதுவும் காணப்படவில்லை. அங்கிருந்த மாடத் தில் ஒரு காகிதச் சுருள் தெரிந்தது. அதை வீரபத்திரன் ஆத்திரத் தோடு எடுத்துப் பிரித்தான். அதில் பெண்பிள்ளைக் கையெழுத்துக் காணப்பட்டது. உடனே வீரபத்திரன் அதைத் தன் மனதிற்குள்ளா கவே படிக்கலானான். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"ம-ா-ா-ஸ்ரீ கனம் ஐயா அவர்கட்கு அனேக வந்தனம். ஒரு வன் வெகுகாலமாகப் பாடுபட்டு, விதை விதைத்து, ஜலம் விட்டு, எருவிட்டு, செடியாக்கி, மரமாக்கி, வளர்த்து அது பூ பூத்துக் காய் காய்த்து, பழம் பழுக்கிறவரையில் இடைவிடாது பாதுகாத்துவந் தும் அவன் துரதிர்ஷ்ட பயனானது அந்தப் பழத்தை அவன் புசிக்கக் கொடுத்து வைக்காமல் ஒருகணப்பொழுதில் கள்ளன் கொண்டுபோய் கொள்ளை கொள்ளையாய் தின்று உள்ளம் களித்து ஆநந்த வெள் ளத்தில் மிதக்கும்படியான பாக்யம் அவனுக்கும், துர்பாக்யம் மரம் வைத்தவனுக்கும் நேரிடுகின்றதுபோலத் தாங்கள் எவ்வளவோ பிர யாசைப்பட்டு என்னை எடுத்துவந்து, போலீசார் உபத்திரவத்திற்குத் தப்பி மெல்ல இங்கும் கொண்டுவந்து சேர்த்தீர். ஆனால் மரம் வைத்தவனின் கதியே உம்முடையதுமாயதைப்பற்றி நிரம்பவும் வருந்துகின்றேன். எப்படியெனில், என்னை இவ்வளவு பிரயாசை யோடு காப்பாற்றிக்கொண்டு வந்த நீங்களே என்னை உங்களஜ மானரிடம் கொண்டுவிட்டு உம்முடைய வீரதீர பராக்கிரமங்களை எல் லாம் எடுத்தோதி எஜமானைக் களிப்பித்து அதற்குமேல் பெரிய பரிசைப் பெறுவதற்கு இல்லாமல் உங்களுக்கு அநு கூலமாகவே இருந்துவந்த கிழவியே அந்தப் புகழைப் பெற வெண்ணி என்னிடம் மெல்ல வந்து என்னைத் தட்டி எழுப்பினள்."— என்கிறவரையில் படிக்கும்போதே அவன் முகம் ரத்தம்போலச் சிவந்து, கண்களில் தணல் பறக்கவாரம்பித்தது. உடம்பு ஒரே வேர்வைமயமாய் மாறிப் போய்விட்டது. "ஆ! அந்த வம்புக்காரக் கிழ வியா நம்மைத் துன்பம் செய்துவிட்டாள்?" என்று வாய்விட்டுக் கூறி பின்னும் படிக்கலானான்.

"அப்போதே எனக்கு மயக்கம் தெளிந்துவந்ததாகையால் நான் கண் திறந்து பார்த்ததும் கிழவி பக்கத்திலிருக்கக் கண்டு எனக்கு ஒன்றும் விவரம் புரியாமல் விழித்தேன். எனக்கு நினைவெல்லாம் கிணற்றில் விழுந்த வரையிலேயே இருந்தது. பிறகு என்ன நடந்த தென்பதையே யான் சற்று மறியமாட்டேனாகையால் நான் அப்போ தும் கிணற்றிலிருக்கிறேமா அல்லது எமலோகத்தில் இருக்கிறேமா என்பதை யறியாமல் சற்று விழித்தேன். அப்போது கிழவி எனக்கு சிறிதளவு பால் கொடுத்தாள். அதை யானருந்திய பின்னர், மெல்ல பேசத்தொடங்கி, 'அம்மா! நீங்கள் யார்? நான் எங்கே இருக்கிறேன்?

தயவு செய்து எனக்கு வரலாற்றைச்சொல்ல வேண்டுமென்று நான் கெஞ்சிக் கேட்டதற்குகிழவி தான் வெகு சாத்விகம்போலப் பேசத் தொடங்கி, தாங்கள் என்னை எடுத்துவந்ததிலிருந்து நடந்த விருத்தாந் தங்களை எல்லாம் கூறி, என்னைத் தாங்கள் தங்களெஜமானரிடம் கொண்டுவிட்டு அந்தப் பரிசைத் தாங்கள்பெற விரும்புகின்றதாயும் "அனியாயமாய் உன்னைக் கெடுக்க எண்ணினான். நீ நல்ல உத்தமி. உன்னை வீணே அவன் கெடுக்க எண்ணியதை நோக்க எனக்கு மனம் தாளவில்லை யாகையால் மெல்ல வெளிக்கிளப்பிக் காப்பாற்றி விட லாம் என்ற எண்ணத்தோடேயே நான் திருட்டுத்தனமாய் எல்லோ ரும் தூங்கியபின் கள்ளச்சாவியால் அறையைத்திறந்து வந்து என் உள்ளத்தை வெளியிட்டேன். நீ என்ன சொல்கிறாய்?' என்று என்னைக் கேட்டாள்.

ஐயா! அதுவரையில் நான் அவள் சொல்வதை உண்மை என் றும் அவள் உண்மையிலேயே நல்லவளென்றும்; நம்மைக் காப்பாற் றுவதாகச் சொல்வது காருணியமான குணத்துடன் என்றும் முற்றும் நம்பி நான் அவளிடம் "பாட்டி! நீங்களே என் குலதெய்வம். என்னை இவ்வித ஆபத்துக்காலத்தில் காப்பாற்ற வேண்டுமென்று வந்த உங் களை நான் பலதரம் வந்தனமிடுகின்றேன். நான் உங்கள் பின்னோடு இதோ வந்து விடுகின்றேன். என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று அவளை வேண்டினேன். பிறகு அவள் அதற்கு இணங்கி "நீ இங் கேயே இரு. நான் இதோ வெளியேசென்று எல்லோரும் தூங்குகின் றார்களா வென்று பார்த்து வருகிறேன்" என்று கூறி அந்த அறைக் குப் பின்புறமாய்ச் சென்றாள். அங்கு யாரோ ஒரு ஆண்பிள்ளை நின்றிருந்தான். அவனிடம் கிழவி சென்று, மெல்லப் பேச வாரம்பித்தாள். அப்போது எனக்குச் சந்தேகமாக விருந்த தால் நான் மெல்ல பின்பக்கத்து ஜன்னலண்டை சென்று உற்று கவனித்தேன். அப்போது அவள் கூறியதாவது. "அந்தப் பெண்ணை நான் காப்பாற்றுவதாகச் சொல்லி சரிப்படுத்திவிட்டேன். நீ உடனே வண்டி கொண்டுவா. நான் அவளையழைத்துவந்து வண்டியில் ஏறு கிறேன். நீ வண்டியை வீட்டுக்குவிடு. நாம் அவளை எஜமானனிடம் கொண்டு சேர்த்து நாமே கஷ்டப்பட்டுக் கொண்டு வந்ததாகக் கூறி பரிசை வாங்கி இருவரும் பகிர்ந்துகொள்ளலாம்." என்று கூறி யதைக்கேட்ட பிறகே எனக்குக் கிழவியின் உண்மை வெளியாயிற்று. ஆனாலும் நாம் எப்படியாவது இதைவிட்டு வெளிக்கிளம்பிவிட்டால் நடுவழியில் நாம் தப்பிதத்துக்கொண்டு கிழவியை தருணத்தில் பிடித்து விடலாம் என்ற முன் எண்ணத்தைக்கொண்டுநான் ஜன்னலை விட்டு வெளியேவந்தேன். உடனே எனக்கு ஒரு யோசனை தோன்றிற்று. அதாவது இந்த வரலாற்றை நீங்கள் அறியும்படி எழுதிவைத்துக் கிழவியின் குணத்தை உங்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும் என்ற

எண்ணத்தோடு நான் மெல்ல அந்த அறையை விட்டு வெளியில் சென்று ஓசை செய்யாமல் பார்த்தேன். ஓர் பக்கத்துத் தாழ்வாரத்தில் ஒரு மேஜைமீது மசிக்கூடு, இறகு, காகிதம் எல்லாம் கிடந்தன. உடனே நான் அவற்றை எடுத்துக்கொண்டு முன்னிருந்த விடுதிக்கே சென்று அங்கு கிழவி வைத்திருந்த மினுக்கு மினுக்கு என்று எறிந்த விளக்கின் உதவியால் இந்தக் கடிதத்தை அவசரத்தில் வரைகிறேன். கிழவி வண்டிக்காகக் காத்திருக்கிறாள். ஆகையால் எனக்கு சாவகாசம் ஏற்பட்டு வரைகிறேன். 'காத்திருந்தவன் பெண்டாட்டியை பார்த்திருந்தவன் கைப்பற்றினன்' என்ற பழமொழி உமக்கே பலிதமாயிற்றே. மரம் வைத்தவன் பலனையும் நீரே யடைந்தீர். "வம்புக்காரர் நேசம் நம்பிவிட்டால் மோசம்" என்றபடி அந்த வம்புக்காரக் கிழவியின் நேசத்தை நான் நம்பிவிட்டால் மோசமே போய் விடுவேன். ஈசனருளால் உண்மையை யறிந்த பிறகு எனக்கு மோசம் நேரிடாது. அந்த வம்புக்கார நேசத்தை நீங்கள் முற்றிலும் நம்பியவர்களாகையால் மோசம் போய் விட்டீர்கள்! எப்போதும் ஒரே எண்ணத்தோடும் ஒரே குணத்தோடும் உழைப்பவர்களை நம்பினல் பலன்தான். வம்புக்காரியை, உள்ளொன்றும், புறமொன்றும், எண்ணத்தில் ஒன்று பேசுவதில் ஒன்று, செய்கையில் ஒன்று இவ்விதம் பல பட்டையாகவிருக்கும் கிழவியை நம்பியதால் உங்களுக்கே மோசம் வந்துவிட்டது. இந்தவிதம் நீங்கள் என்னைச் செய்ததால் கிழவின் மூலமாய் உங்களுடைய வியாபாரத்தையும் நான் அறிந்து கொண்டேன். என்னைப்போல எத்தனை பெண்மணிகளை இவ்விதம் கெடுத்து புண்ணியமான வேலையைச்செய்து அதனல் லாபமடைந்து வந்ததெல்லாம் இன்றோடு மண்ணாய்விட்ட தென்பதை உறுதியாய் நம்பலாம். நான் தக்க சமயத்தில் கிழவியைப்பிடித்து நசுக்கிவிட்டு உடனே போலீஸாருக்கு இந்தச் சேதியைத் தெரிவித்து இந்த இடத்தையும் நானே காட்டி உங்களை இனி பாவம் செய்யாத வழியில் திருந்தச் செய்வதான வழியைத் தேடுகின்றேன். கொள்ளிக்கட்டையால் தலையைச் சொறிந்துகொண்டது போல உங்கள் காரியத்தாலும், கிழவியின் சிநேகிதத்தாலும் உங்கள் தலைக்கே தீம்பு வந்துவிட்டது. அதோ கிழவிவருகிறாள். இதோடு நிறுத்தி வந்தனம் செய்கிறேன். நான் இவ்வளவு சூரத்தனமாய் உங்களைப் பிடித்துக்கொடுத்த புகழினலாவது என் பர்த்தா என்னை இனிபாவது சேர்த்துக்கொள்ள மாட்டாரா? எல்லாவற்றிற்கும் அவனடியை நம்பி இருக்கிறேன். கிழவி வந்துவிட்டாள்."

இப்படிக்கு,

சுந்தரவல்லி.

என்பதைப் படித்ததுதான் அவன்பாடு விவரிக்க இயலாதவிதமான அவஸ்தையாகிவிட்டது. குமாஸ்தாவை நோக்கி "ஆ! நமக்கு வந்து விட்டது மோசம். இதைப்படியும் உரக்க. எல்லோரும் கேட்கட்டும். என் வாயினால் சொல்லவும் கூசுகின்றது." என்று கூறியவண்ணம் கடிதத்தை குமாஸ்தாவிடம் கொடுக்க அதை அவன் நடுக்கத்தோடு வாங்கி உரக்கப்படித்தான். அவ்வளவுதான். அங்கிருந்த ஏனையோரும் ஒரே காலத்தில் நெருப்பில் நிற்பவர்போலத் துடிக்கின்றார்கள். தலை சுழலுகின்றது. தமது இரகஸ்யம் வெளியாகிவிடும் தறுவாயிலிருப்பதை எண்ண எண்ண அவர்கள் நிலைமை விவரிக்கவே இயலாமற் போய்விட்டது. "ஆ! அந்தச் சண்டாளக் கிழவி, படுபாவி, மோசக்காரி, வஞ்சகக்காரி, அவளா இவ்வளவு தூரம் செய்திருக்கிறாள்?" என்று எல்லோரும் கூச்சலிட்டுத் தத்திக்குதித்துத் தாண்டவமாடுகின்றார்கள். வீரபத்திரன் நிலைமையை விவரிக்கவே முடியவில்லை. அவன் உரத்த குரலால் பேசத்தொடங்கி குமாஸ்தாவைப்பார்த்து "ஐயா! இந்தவேளை நாம் வெறுமை இருந்தால் காரியம் மிஞ்சிவிடும். அந்தக் கிழவியின் வண்டி எந்த திக்கை நோக்கிச் சென்றாலும் பின்பற்றிச் செல்லவேண்டும். உடனே சென்று அவளைக் கண்டுபிடித்து இங்குக் கொண்டுவந்து அவளை நன்றாக உயிரோடு வதைசெய்யவேண்டும். என்வயிறு பற்றிஎரிகின்றது. அந்தச் சண்டாளியை விடலாகாது. நசுக்கிச் சார்பிழிந்து விடவேண்டும். அவள் இந்த மோசக்கருத்தை எண்ணித்தான் அங்குள்ள எஜமான் பெட்டி, பேழை முதலியவைக்கூட எடுத்துக்கொண்டுவந்து விட்டாள் போல இப்போது தோன்றுகின்றது. அடேய் உடனே நமது மோட்டார்கார், மோடார் சைகில், குதிரைவண்டி எல்லாவற்றையும் தயார்செய்யுங்கள், திக்குக்கு ஒருவராகப் பாய்ந்து அவளை இன்று கண்டுபிடியாமல் விடுகின்றதில்லை. உம் ஆயிற்றா?" என்று பெரியதாகக் கர்சனைசெய்தான். உடனே எல்லோரும் பயந்து நடுநடுங்கியவண்ணம் வண்டிகளையெல்லாம் தயார்செய்தார்கள். வீரபத்திரன் மோட்டாரில் அமர்ந்து அதை ஓட்டிச்செல்ல, மற்றவரில் சிலர் வேறே வண்டிகளில் ஏறி திக்குக்கு ஒருவராக வெகு வேகமாக தலைதெறிக்க பொறி பறக்கும் வகையாகவும், காற்றுபோலவும் பறந்தனர். வீட்டில் நின்ற மற்றவர்களெல்லாம் என்ன செய்வதென்பதை யறியாது துடிதுடித்து, சென்றவர்கள் எவ்விதம் திரும்பி வருவார்களோ என்று எதிர் பார்த்த வண்ணம் நின்றுவிட்டார்கள்.

## 13 வது அதிகாரம்.

### வேளையின் பயனோ ! மூளைசிதறல்.

சென்னை ராஜதானி எங்கும் புகழ்பெற்ற துப்பறியும் ராஜாராம் நாயுடுவிற்கு நேர்ந்த விபத்தை பேபர்களின் மூலமாய்க் கேள்விப்பட்டு சென்னையிலுள்ள அத்தனை ஜனங்களும் "ஆ! அந்த மகானுபாவனையா ரயிலிலிருந்து தள்ளினன்? எந்தச் சண்டாளன் மனம் துணிந்ததோ? ஐயோ! தமது தேகத்தை பொதுஜனங்களுக்கே அர்ப்பணம் செய்த சுத்த வீரருக்கும் இத்தகைய ஆபத்து நேரக்கூடுமோ? ஆ! அவர் ஒவ்வொரு இடத்திலும் கண்டு பிடித்திருக்கும் அருமையான விஷயங்களை எண்ண மனம் பூரிக்கின்றதே. என்ன கொடுமை! என்ன கொடுமை!" என்று சகலஜனங்களும், இதே பேச்சாகத்தெருக்களிலும் வீடுகளிலும் எங்குபார்த்தாலும் "ராஜாராம் நாயுடுவிற்கா இந்த ஆபத்து வரலாம்? ஐயோ! உலகமே கண்மூடிவிட்டது போலாய்விட்டதே! அடடா. என்ன அனியாயம்"! என்று ப்ரலாபிக்கலாயினர். ராஜாராம் நாயுடுவைத் தெரிந்த பெரிய மனிதர்களெல்லாம் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் அவரை வந்து பார்க்க வேண்டுமென்ற அவாவினல் நூற்றுக்கணக்கில் ஆஸ்பத்திரியின் வாயிலில் கூடி விட்டார்கள். ஆஸ்பத்திரியின் அதிகாரிகள் யாரையும் உள்ளே விடமாட்டோம் என்று தடுத்து எத்தனை கூறியும் அவர்கள் செல்வதாகக் காணப்படவில்லை. அத்தனை ஜனங்களும் "ஐயா! உங்களப்பன் வீட்டுச் சொத்து என்ன கொள்ளைபோய்விட்டது. நாங்கள் அந்த பிரபுவின் உயிர் இருக்கையில் அவரது திருமுக தரிசனம் செய்துவிட்டுப் போய்விடுகின்றோம். அதற்குச் சற்று விடையளித்தே தீரவேண்டும், என்று பெரிய கூச்சலிட்டுக் கூவினர்கள். அவர்களை ஆஸ்பத்திரியின் அதிகாரிகளும் மற்றவர்களும் எவ்வளவு அடக்கியும் சற்றும் அடங்காததால் இனி இவர்களை உள்ளே விடாவிட்டால், இவர்கள் ஆஸ்பத்திரியையே ஹதம் செய்துவிடுவார்கள். இதற்கு என்ன செய்வதென்று யோசிக்கையில் அந்த ஆஸ்பத்திரியின் பெரிய டாக்டர் அவ்விடம் வந்து ஆஸ்பத்திரியின் அதிகாரிகளைக் கண்டு, "ஐயா! இவ்விதம் இவர்கள் கூச்சலிடுவதில் நமது நோயாளிகளுக்கு மிகவும் உபத்திரவமாக விருக்கிறது. இதனல் அவர்களின் நோய் பலப்படுமேயன்றி குறைவு படஹேதுவில்லையாதலால் இத்தனை ஜனங்களும் அந்த உத்தமரைக் காண மெத்த ஆவல்கொண்டுச் சித்தமாய் வந்துக் காத்திருக்கையில் நாம் சொல்வது அவர்கள் செவிக் கெட்டாதாகையால் நாம் வீணே அவர்களைப் போகச் சொல்வது செவிடன் காதில் சங்கு ஊதிய

மாதிரிதானாகும். அதனால் நமக்கு நஷ்டமேயன்றி லாபமில்லை. ஆகையால் நாம் அவர்களை எல்லாம் 10—10 பெயர்களாக உள்ளே விட்டு இரைச்சலிடாமல் அழைத்துக்கொண்டு போய் ராஜாராம் நாயுடுவைக் காணச்செய்து பின்னர் அனுப்பிவிடுவதுதான் உத்தமம். எதற்கும் யோசித்துச் செய்யுங்கள். அவர்களைப் போகச் செய்வது அசாத்தியத்திலும் அசாத்தியம். இந்த இரைச்சலின் ஹிம்சை தாங்காமல் நோயாளிகளுக்குத் தலைவலி எடுத்துக்கொண்டது. சீக்கிரம் இவர்களுக்கு ஒருவழி தேடுங்கள்'' என்றார். உடனே அங்கிருந்த அதிகாரிகள் டாக்டர் சொல்லியதை ஆமோதித்து அவ்விதமே செய்யத் தீர்மானித்து வீதியில் கூடியிருந்த கும்பலில் பெரிய மனிதர்களாகவும், ராஜாராம் நாயுடுவிடம் அதிகம் பழகியவர்களாகவு மிருந்தவர்களைப் பத்து பத்து பெயராக உள்ளே அழைத்துச் சென்றார்கள். அவ்வளவுக்கு இடம் கொடுத்துவிட்டதுதான் தாமதம், எல்லா ஜனங்களும் மட்டற்ற மகிழ்ச்சியை யடைந்து ஒருவர் மேலொருவராக விழுந்தடித்துக்கொண்டு கிளம்பிவிட்டார்கள். அவர்களை எல்லாம் அடக்கிப் பந்தி பந்தியாய் அழைத்துக்கொண்டு உள்ளே சென்றார்கள்.

அந்தோ! ராஜாராம் நாயுடுவோ தன்னினைவு தனக்கில்லாமல் சவம்போல உயிருக்கின்றதோ இல்லையோ என்ற சந்தேகமாக மூச்சு விடுவதே தெரியாமல் சிறிய மூச்சை மெல்ல விடுகின்றனர். தலையில் பஞ்சினால் மருந்துகள் போட்டுக் கட்டப்பட்டு இரு புறமும் இலவம் பஞ்சினாலான தலையணைகள் வைக்கப்பெற்று அவற்றின் மீது தலையைவைத்து அவர் படுத்திருக்கிறார். வைத்தியர்கள் அவரைச்சுற்றிலும் உட்கார்ந்து அவருக்கு சிகிச்சைகள் செய்துகொண்டே இருந்தார்கள். அவருக்கு பால் முதலிய ஆகாரம் எதுவும் செல்லவே இல்லை. கண்ணை திறந்து பார்க்கவே இல்லை. உடம்பில் எந்த அங்கமும் அசைவென்பதே இல்லாமல் மரம்போலவிருந்தது. பக்கத்திலிருந்த மருத்துவர்கள் அவர் பாதத்தில் ஏதோ மருந்துகளைக் கொட்டித் தேய்த்துக்கொண்டே இருக்கிறார்கள். அவர் படுத்திருக்கும் கோராமையைக்கண்ட வந்த ஜனங்களெல்லாம் கண்ணீர்விட்டு "ஆ! ஜகமெல்லாம் புகழ்பெற்ற வீரசிங்கமே! உங்களை இப்படிப்பார்க்க நாங்கள் என்ன பாபம் செய்திருந்தோமோ தெரியவில்லையே. ஏ தர்மதுரையே! உங்கள் வாயா இப்படித் திறவாமல் மௌனமாக விருக்கும். எந்த ஜனங்களைப் பார்த்தாலும் ஏழை, பணக்காரர்கள் என்ற பேதமின்றி குழந்தையைப்போலக் கொஞ்சி விளையாடும் உங்கள் திருவுருவம் இவ்விதம் அசையாமல் படுத்திருத்தல் நீதியோ? அந்தக் கடவுளுக்கு இது சம்மதமாயிருக்கிறதா? ஐயோ! தாங்கள் கண்ணைத் திறந்து எங்களைப் பார்க்கலாகாதா. நாங்களெல்லோரும் கத்துவதும் கதறுவதும் உங்கள் செவிக்கெட்டவில்லையா. சிறிய ஜந்துக்களுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்துவிட்டால் அதைக் கண்டு சகியாத தங்களை

இவ்வித ஆபத்தில் எந்தச்சண்டாளன் சிக்கச்செய்தானே? அவனை நல்ல பாம்பு நருக்கென்று கடிக்காதா? ஐயோ! பிரபுவே! உயர்ந்த சரிகைகளினால் நெய்த முண்டாசு கட்டிய தங்கள் தலையில் இவ்வித பஞ்சும் பஞ்சத்துணியையுமா கட்டவேண்டும். சதா அன் றலர்ந்த தாமரை புஷ்பம்போல சிரித்த வண்ணமாகவே இருக்கும் செங்கனி வாய் திறவாது பல் கிட்டி இவ்விதமாகவா மூடிக்கிடக்க வேண்டும்? ஐயோ! இந்தக் கோரமான படுக்கையை எங்களால் கண்டு சகிக்க முடியவில்லையே. ஏ காருண்ய வள்ளலே! ஏ ஜனோபகாரியே! தமிழ் நாட்டின் திலகமே! பரிதியைக்கண்டு அஞ்சியோடும் பனி, இருள்போலத் தங்கள் நாமதேயத்தைக் கேட்க துஷ்டர்கள் குடல் நடுக்கமடைந்து ஒளி விளக்காகிய உங்கள் முன் நில்லாமல் கதறியோடு வார்களே! அத்தகைய குல விளக்காகிய தாங்களா இவ்விதம் கண் ணைத்திறவாமல் படுத்திருப்பது! ஐயோ! உங்கள் பரிதாபகரமான நிலைமையைக்காண எங்களால் சகிக்க முடியவில்லையே.'' என்று பல வாறாக மொழிந்து கண்ணீரைக் காறைக ஓடவிட்ட வண்ணம் கதற வாரம்பித்துவிட்ட ஜனங்களைக் கண்ட டாக்டர் பெரிதும் கோபம் கொண்டவராகச் சீறி எழுந்து "ஓ! உங்களை நான் உள்ளேவிடச் செய்ததே தவறு. நீங்கள் ஜன்னலின் வழியாக வாய் திறக்காமல் இவரைப் பார்த்துச் செல்வதைவிட்டு வீணாகக்கத்திக் கூச்ச லிட்டு நோயாளிகளுக்கு இவ்வித உபத்திரவத்தை விளைவிக்கின்றீர் களே! எல்லோரும் வெளியே போங்கள்; இனி உள்ளே யாரையும் விடமாட்டோம்'' என்று அதட்டிப்பேசி, எல்லோரையும் வெளியில் தள்ளியது பகீரதப் பிரயத்தனமாகிவிட்டது. பிறகு வீதியில் நின் றிருந்த மனிதர்க ளெல்லோரையும் போலீஸ் கான்ஸ்டேபில்களை விட்டு 'இனி உள்ளே விடுவதற்கு உத்தரவில்லை' என்று கூறியனுப்பி விட்டார்கள். எல்லா ஜனங்களும் ஆஸ்பத்திரியின் அதிகாரிகளையும், போலீஸாரையும் பலவாறாகத் திட்டிக்கொண்டே போய்விட்டார்கள். அந்தச்சமயம் அங்கு ஒரு மோட்டார் வந்து நின்றது. அதிலிருந்து நமது ராமாம்ருத முதலியார் கால் கட்டுடன் மெல்ல நொண்டி நொண்டி நடந்த வண்ணம் கீழே இறங்கினர். அவருக்குப் பின்னல் பரமசிவ னும் இறங்கினன்.

முன்னேர் அத்தியாயத்தில் ராமாம்ருதம் பேபர் படித்து ராஜா ராம் நாயுடுவின் சேதியை யறிந்தவுடன் மூர்ச்சையாகி விட்டாரென்று சொன்னேமல்லவா. பிறகு அவர் எப்படி அங்கு வந்து சேர்ந் தார் என்பதையறிய வேண்டுவது முக்கியமாதலால் நாம் அதைக் கூறுவோம்.

அவர் "ஹா'' என்று கூவியதைக்கேட்ட அவரது அன்னையும் அக் காளும் வந்து இதென்ன விபரீதமென்று பயந்து நடு நடுங்கிவிட்டார் கள். நடந்த சேதியை அவர்களறியார்களாகையால் அவர்களுக்கு

அவரைக்கண்டதும், "ஐயோ என்னவோ விபரீதம் வந்துவிட்டதே!" என்று பயந்து முதலியாரை அன்போடு "தம்பி! தம்பி!" என்று உருக்கமாகக் கூவியழைத்தார்கள். அவருக்கு அது காதில் படவே இல்லை. ஒரே மூர்ச்சையாக அவர் படுத்திருந்ததைக் கண்ட தாயார் பேபர் விஷயமாக அவர் மூர்ச்சித்துக் கிடக்கிறார் என்பதையறியாதவளாகையாலும், அவர் கூச்சலிட்டு வீழ்ந்தபோது கையிலிருந்த பேபரும் தானாகவே நழுவி விழுந்துவிட்டமையாலும் அந்த அம்மையின் மனது வெவ்வேறுவிதமாக எண்ண வாரம்பித்துவிட்டது. "ஆ தம்பி! என்னருமைத் தம்பி! ஏனப்பா நீ திடீரென்று மூர்ச்சித்து நிலத்தில் சாய்ந்துவிட்டாய்?" என்று கூறிக்கொண்டு அருகில் சென்று அவரைத்தட்டி எழுப்பினாள். அவரது தேக முழுதும் ஒரேவியர்வை வெள்ளமாக நிறைந்திருந்ததைக் கண்ட பார்வதியம்மாள் "ஐயோ! தம்பியை ஏதோ துஷ்டஜெந்து கடித்துவிட்டது போலிருக்கிறதே! தேகம் பனிக்கட்டிபோலச் சில்லென்று தண்ணீராய் ஓடுகின்றதே! என்ன செய்வேன்?" என்று கூவிய வண்ணம் அங்கு சுற்றுமுற்றும் திரும்பிக் கீழே பார்த்தாள். எவ்விதமான துஷ்ட ஜெந்துவும் காணப்படவில்லை. "ஐயோ! இங்கு துஷ்ட ஜெந்து எதுவும் காணப்படவில்லையே! என்ன காரணத்தினால் தம்பி இவ்விதம் திடீரென்று சாய்ந்துவிட்டானோ தெரியவில்லையே. பரமசிவனையாகிலும் கூட்டிக்கொண்டு வாருங்கள்" என்றாள். உடனே ஒரு வேலைக்காரன் ஓடி பரமசிவத்தைக் கூட்டிக்கொண்டு வந்தான். பரமசிவன் வந்தவுடன் அவரது நிலைமையைக்கண்டு "அப்பா! தம்பி! ராமாம்ருதம்! ராமாம்ருதம்!" என்று பதறப் பதறக் கூவியவண்ணம் அவரது அன்னையை நோக்கி "அம்மா! என்ன உடம்பு? தம்பி ஏன் இவ்விதம் ப்ரஜ்ஞையற்று படுத்திருக்கிறான்?" என்றான்.

அதைக்கேட்ட பார்வதியம்மாள், கண்ணீர் பெருக, நாதழுதழுக்க "அப்பா! நான் இதை என்னவென்று சொல்லுவேன்! உட்கார்ந்திருந்தவன் திடீரென்று ஒரு கூச்சலிட்டான். அதைக்கேட்ட நாங்கள் ஓடோடியும் வந்து பார்த்தோம். அப்போதிருந்து இவன் இவ்விதமே படுத்திருக்கிறானப்பா. என்ன செய்வேன்? நீ உடனே நம்முடைய மோட்டாரில் ஏறிக்கொண்டு சென்று நமது டாக்டரையழைத்துக் கொண்டுவா." என்றாள்.

உடனே பரமசிவன் சென்று அரைநாழிகையில் வைத்தியரை அழைத்துக்கொண்டு வந்துசேர்ந்தான். வைத்தியர் ஜெமீந்தாரின் நாடி முதலியவற்றைப் பார்த்து, "அம்மா! இவரை துஷ்டஜெந்துஎதுவும் தீண்டவில்லை. ஏற்கெனவே காலில் அடிபட்டதால் தேகம் மிகவும் தளர்ந்திருக்கிறதாகையால் இவருடைய மனதில் திடீரென்று ஏதோ ஒருவிதக் கலக்கமோ, துக்கமோ தோன்றி இருப்பதால் பலஹீனமான தேகம் அந்த அதிர்ச்சியைத் தாங்காமையால் இவர் மூர்ச்

சையினால் மயங்கிக் கிடக்கின்றார். ஆனாலும்பயமில்லை. இது சீக்கிரமே தெளிந்துவிடும்; இதோ இந்த மருந்தை மூக்கில் முகரவைத்தால் உடனே இது தெளிந்துவிடும். கவலைப்படவேண்டாம்.'' என்று கூறியவண்ணம் தமது கைப்பெட்டியைத் திறந்து மருந்துபுட்டியொன்றை எடுத்து அதிலிருந்ததை ஒரு சிறியதட்டில்கொட்டி, அதைப் பஞ்சினால் நனைத்து மூக்கினருகில் காட்டி அதன்மணம் அவரது சுவாசத்தோடு உள்ளே போகும்படி செய்தார். சற்றுநேரத்திற்கெல்லாம் ராமாம்ருதம் கண்களைத் திறந்துபார்த்தார். அப்போதுதான் அங்கிருந்தவர்களுக்குச் சற்று உயிர்வந்தது. உடனே பார்வதியம்மாள் வெகு வாத்ஸல்யத்தோடும், அன்போடும் பேசத்தொடங்கி "என் கண்ணே! ராமாம்ருதம்! உனக்கு உடம்பு என்ன செய்கின்றதப்பா! ஏன் மயக்கமாய்ப் படுத்துக்கொண்டாய்?'' என்று கேட்டாள்.

அப்போதும் நன்றாய்த் தெளிவடையாத ஜெமீந்தார் கண்களை மூடியவண்ணம் "ஆஹா! ராஜாராம்நாயுடு வந்தாரா? அவர் பிழைத்து விட்டாரா? சேதி தெரிந்ததா?'' என்று பிதற்றவாரம்பித்ததைக்கண்ட பார்வதி மறுபடியும் கண்ணீர்விட்டுக் கலங்கலாயினள். அந்த வார்த்தையைக் கேட்ட பரமசிவன் ஒருவாறு யூகித்துக்கொண்டு 'ஓஹோ! இவன் பேபரில் ஏதோ படித்திருக்கிறான். அதோ பேப்பரும் கீழே விழுந்திருக்கின்றது. அதை எடுத்துப் பார்ப்போம்' என்று கீழே விழுந்துக்கிடந்த பேப்பரைக் கையிலெடுத்து அதில் பெரிய எழுத்துக்களுள்ள தலைப்புகளை யெல்லாம் படித்துவந்தான். அப்போது ராமாம்ருதம் படித்த செய்தியைக்கண்டதும் அவனும் வாய்விட்டு ஹா! என்று கூச்சலிட்டான். உடனே அவன் மெல்ல தன்னைத்தானே தேற்றிக்கொண்டு "இதோ பாருங்கள்; இதைக்கண்டுதான் தம்பிக்கு மூர்ச்சையாகி விட்டது. ஹா! துப்பறியும் நிபுணருக்கு நேர்ந்த ஆபத்தைப் பாருங்கள்'' என்று கூறியவண்ணம், அந்தச் செய்தியை உரக்கப் படித்தான். அதைக்கேட்ட எல்லோரும் கண்ணீர்விட்டுக் கலங்கி வருந்தினார்கள். அதற்குள் ராமாம்ருதத்திற்கு மூர்ச்சை நன்றாய்த் தெளிவடைந்தது. உடனே அவன் கண்களைத் திறந்துபார்த்துப் பேசத் தொடங்கி "அப்பா! பரமசிவம்! நீ உடனே சென்று நமது மோட்டாரைத் தயார்செய். நாம் புறப்பட்டு சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போய் எனது உயிர்நிலையைக்கண்டுபிடித்துத் தருவதாக வாக்களித்த வீரசிங்கத்தைப் பார்த்துவிட்டுத்தான் வரவேண்டும். வண்டி தயாராய்விட்டதா?'' என்றார்.

அதைக்கேட்ட பரமசிவன் "தம்பி! அவசரப்படாதே. உனக்கு ப்ரஜ்ஞை வருவதற்குக் காலைமுதல் இந்நேரமாயிற்று. இப்போதே நீ உடம்பை அலட்டிக்கொண்டால், கெடுதல் சம்பவிக்கும். சற்று உடம்பு நன்றாகத் தெளிவடைந்தபிறகு போய்விட்டு வரலாம்'' என்

ருன். அதைச் சிறிதும் பொருட்படுத்தாத ஜெமீந்தார் "எனக்கு உடம்பில் இப்போது எவ்வித பாதையுமில்லை. நான் அந்த மஹாத்மாவைப் பார்த்துவிட்டு வந்தாலன்றி எனக்கு உடம்பு சரிப்படாது, ஆகையால் உடனே வண்டியைப் போடச்சொல் என்று ஒரே பிடிவாதமாகச் சொல்லியதற்கு எதிர்மறித்துச் சொல்ல யாராலுமாகவில்லை யாதலால் எல்லோரும் பேசாது இருந்து விட்டதைக் கண்ட பரமசிவன் அதற்குமேல் தான் ஒன்றும் சொல்லலாகாதென்று எண்ணி, வீதியில் ஏற்கெனவே ஆயத்தமாய் நின்று கொண்டிருந்த வண்டி அங்கேயே இருந்ததாகையால், ஜெமீந்தாரை நோக்கி "தம்பி! வீதியில் டாக்டரை யழைத்துவந்த வண்டி அப்படியே இருக்கின்றது. உன்னிஷ்டம் போல வரலாம்" என்ருன். உடனே ராமாம்ருதம், வேலையாளை நோக்கி "அடேய்! நமது பெட்டி வண்டியைத் தயாரித்து வைத்தியரை அவரில்லத்தில் கொண்டுபோய் விடுங்கள். நான் போய்வருகிறேன்" என்று எல்லோருக்கும் கூறிக்கொண்டே மெல்ல தட்டித் தடுமாறியபடி வந்து வண்டியில்உட்கார்ந்தார். பரமசிவனையும் கூடவரும்படி அவர் வேண்ட அவனும் வண்டியில் உட்கார்ந்த வுடன், வண்டி புறப்பட்டது. இருவரும் ராஜாராம் நாயுடுவின் குணதிசயத்தைப்பற்றி வண்டியில் பேசிக்கொண்டே சென்ருர்கள்.

ராமா:—பரமசிவம்! அந்த உத்தமருக்கு இத்தகைய ஆபத்தை எந்தக் கிராதகன் செய்திருப்பானென்று விளங்கவில்லையே! மனந்துணிந்து அவருக்கு இவ்விதம் கெடுதல் செய்ய வேண்டுமென்று எத்தனை நாள் காத்துக்கொண்டிருந்தானே தெரியவில்லை.

பரமசிவன்:—அப்பா! அவர் சாதாரணமாய்ப் பூமியில் பிறக்கக்கூடிய மனிதரேயல்லர். அவர் சைவபக்தர்களாகிய நாயன்மார்களைப் போலவும், விஷ்ணு பக்தர்களாகிய பன்னிரு ஆழ்வாராதிகளைப் போலவும் வந்துள்ள அவதார புருஷரேயன்றி இப்பூவுலகில் கலிகாலத்தில் உள்ள மானிட ஜென்மாவைச் சேர்ந்தவரேயல்லர். அவர் கடவுளின் அம்சம். அவர் இந்த உலகிலிருக்கும் துஷ்டரை நல்வழியில் திருத்தச்செய்யும் துரைசிங்கமல்லவா! துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் செய்யும் இஷ்ட தெய்வமல்லவா அவர்! இப்பூவுலகின்கண் ஓர் அவதாரம் எடுத்து தமது தேகத்தையும் உயிரையும் பொது ஜனங்களுக்கே அர்ப்பணம் செய்ய முன் வந்துள்ள கற்பகதருவன்ருே! அவரது திருநாமத்தைக் கேட்ட மாத்திரத்தில் துஷ்டர்கள் இடியோசையைக் கேட்ட நாகம்போலத் துடிதுடிக்கச் செய்யும் மந்திர சக்தியைப்பெற்ற மஹானுபாவனல்லவா அவர். அத்தகைய மனிதருக்கு ஈசன் இவ்வித ஆபத்தைக்கொண்டு வந்துவிடவேண்டுமா. இதை எண்ணுந்தோறும் என்னெஞ்சம் பதைத்துத் துடித்துப் பாகாயோடுகின்றது"

என்றான். இதற்குள் வண்டி ஜெனரலாஸ்பத்திரி வாசலில் வந்துநின்றது. அங்குவண்டி வருவதற்குக்கூட இடமில்லாமல் ஒரேகூட்டமாயிருந்ததைக்கண்ட அவ்விருவரும் திடுக்கிட்டு மயங்கினார்கள் "ஆ! என்ன இவ்வளவு கூட்டமாக இருக்கிறதே. ஒருகால் அந்தப்புண்ணிய புருஷர் இறந்துவிட்டாரோ ஒன்றும் தெரியவில்லையே! ஒரே கூட்டமாய்ச் சாய்கின்றதே." என்று பலவாறாகப் புலம்பிக்கொண்டே இருக்க கும்பல் கொஞ்ச கொஞ்சமாகக் கலைந்துவிட்டது. அவர்கள் வண்டியோடு சென்று மெல்ல இறங்கினார்கள்.

அப்போது அங்கிருந்த ஆஸ்பத்திரியின் அதிகாரிகள் உள்ளே செல்லும் சமயமாதலால் அவர்கள் இவர்கள் வந்ததைக்கண்டு நின்று யார்? என்ன? என்பதை விசாரித்தார்கள்.

அதைக்கேட்ட பரமசிவன் "ஐயா! இவர் செஞ்சிக்கோட்டை ஜெமீந்தார். இவருக்கு முக்கியமான பந்துவும் சிநேகிதருமாகிய ராஜாராம்நாயுடுவின் சேதியைக் காலைப் பேபரில் படித்தபிறகு இவர் உயிரே திரும்பி வராதென்று நாங்களெண்ணி விட்டோம். அத்தகைய நிலைமைக்கு இவர் வந்துவிட்டார். உடனே நாங்கள் டாக்டரையழைத்து சிகிச்சைசெய்து தெளியச்செய்தபாடு பகீரதப் பிரயத்தனமாகிவிட்டது. இவருக்குச் சற்றுத் தெளிந்ததும் "ஹா! நான்முன்னால் ராஜாராம் நாயுடுவைப் பார்த்தால்தான், என்னுயிர் நிலை நிற்கும்" என்று ஒரே பிடிவாதமாகக் கூறிப் புறப்பட்டு வந்திருக்கிறார். இவருக்கு இரண்டுநாளைக்கு முன் மோட்டாரினால் பெரியவிபத்துநேர்ந்துவிட்டது. அதனால் ஏற்பட்ட கால் ரணம் இன்னும் ஆறவில்லை. அதோடு இவர் நடக்கமாட்டாமல் வந்திருக்கிறார். தாங்கள் எப்படியாகிலும் தயவுசெய்து அவருடைய முகதரிசனம் இவருக்குக் கிடைக்கச் செய்துவிட்டால் அதுவே போதும். இல்லையேல் இவருடைய உயிருக்கும் ஆபத்து வந்துவிடும்" என்றுகூறி வெகுவாய்ப்பணிந்துவேண்டினான். அவன் சொல்லி வாய்மூடுமுன் அவ்விடத்தில் ஒரு மோட்டார் கார் வந்துநின்றது. அதிலிருந்து, வெகுகாம்பீரத் தோற்றமுடையவராய்க் காணப்பட்ட, சுமார் 40 வயது மதிக்கக்கூடிய ஒரு மனிதர் வண்டியை விட்டிறங்கி நேரே அவர்கள் இருந்த இடத்திற்கு வந்து "ஆ! நாயுடுகாருவின் தேகஸ்திதி எப்படி இருக்கிறது? அந்த விபரீதச்செய்தியைக் கேட்ட மாத்திரத்தில் என் உயிரே போய்விட்டது. உடனே அவரைப் பார்க்கவந்தேன். தயவுசெய்து உள்ளே செல்ல விடையளிக்கவேண்டும்." என்று பதறப் பதறக்கூறி வேண்டினார். உடனே அதிகாரி தடுக்கமாட்டாதவராய் அவர்களை உள்ளே அழைத்துச் சென்றார். ஆனால் முன்னால்வந்த ஜனங்களை ராஜாராம் படுத்திருந்த விடுதிக்குள் விடாமல் ஜன்னலின் வழியாகவே அவரை அவர்களுக்குக் காட்டியதுபோலச் செய்யாமல், இவர்களை அவர் படுத்திருந்த விடுதிக்குள்ளேயே அழைத்துச் சென்றார்.

அங்கு ராஜாராம் நாயுடு உலகத்தை மறந்து, உணர்வை யிழந்து படுத்திருந்த கோரத்தைக் கண்டு சகியாமல் உள்ளே சென்ற மூவரும், தம்மை மறந்து விம்மி விம்மி யழுது, அவரை வாயில் வந்தவாறு புகழ்ந்து, புகழ்ந்து பிரலாபித்தார்கள்; பிறகு சற்று தம்மைத் தாமே தேற்றிக்கொண்டு அவரை உற்றுப்பார்த்த வண்ணம்அங்கு போடப்பட்டிருந்த விசிப்பலகையின்மீது உட்கார்ந்தார்கள்.

பிறகு வந்த மனிதன் ராமாம்ருதத்தைப்பார்த்து "ஐயா! தாங்களும் என்னைப்போலவே இந்தப் பரமபுருஷனிடத்தில் அதிகப்ரேமையுள்ளவர் என்பதை உம்முடைய செய்கையிலிருந்து அறிந்தேன். உமக்கும் இவருக்கும் நெடுநாளாய்ப் பழக்கமுண்டோ?" என்று கேட்டார்.

ராமாம்ருதம்:—ஐயா! இந்த உத்தமரின் நாமத்தை அறியாதவர்களும் உண்டோ? நான் நெடுநாளாய் இவருடைய பெயரையும் புகழையும் பற்றிக் கேள்வியுற்றும் படித்து மிருக்கிறேனே யன்றி, நேரில் இவரை நான் பார்த்ததில்லை. இப்போது சமீப காலத்தில் என்னுடைய முக்கியமான ஒரு விஷயத்தில் இவரைத் துப்பறியும்படி கேட்டுக்கொண்ட போதுதான் நேரில் நான் தெரிந்துகொண்டேன், அப்போதிருந்தே இவரை நான் தெய்வம் போல மதித்து வருகிறேன். அவர் சாக்ஷாத் பேசும் தெய்வமென்றே தான் சொல்லவேண்டும். இத்தகைய மஹானுபாவனுக்கு இவ்வித ஆபத்து நேர்ந்துவிட்டதே என்றுதான் எனக்குத் தாங்கமாட்டாத விசனமாக விருக்கின்றது. தாங்கள் அன்னவரை வெகு காலமாக அறிவீர்களா! தாங்கள் இருப்பிடம் யாது! அதை நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று வெகு வணக்கத்தோடு கூறினர்.

அதைக்கேட்ட வந்தவர் வெகுமரியாதையோடு பேசத்தொடங்கி "ஐயா! நானிருப்பது சைதாப்பேட்டைக்கப்பாலுள்ள ஆலந்தூர் என்னும் கிராமம். அவ்விடத்தில் ஒரு நாடகக் கம்பெனியை ஸ்தாபித்து ஏதோ நடிகர்களைச் சேர்த்து நாடகம் நடத்தி வருகிறேன். அங்கு சில தினங்களுக்குமுன்ஒரு விநோதமான திருட்டு நடந்தது. அதைத் தாங்களும் பேபர்மூலமாய்ப் படித்திருக்கலாம்" என்று அவர் சொல்லி வாய்மூடுமுன் ராமாம்ருதமும், பரமசிவனும் "ஆ! அந்த நாடகக் கம்பெனியின் சொந்தக்காரரா தாங்கள்! அடடா! என்ன அனியாயமான கஷ்டம் தங்களுக்கு வந்துவிட்டது. எப்படிப்பட்ட நயவஞ்சகப்பாவியாயிருந்தால் அவன் அவ்விதமோசத்தை மனந்துணிந்து செய்திருப்பான்? பரமதுரோகி என்றால் அவனை விட்டுவேறு தேட வேண்டாம். ஆமாம். ஏதாவது புலன் கிடைத்ததா?" என்று நயமாயும் அனுதாபத்துடனும் கூறினர்கள்.

வந்தவர்:— என்சேதியைக் கேட்டால் அதுராமாயணந்தான். நான், அந்தத் திருட்டு நடந்தவுடனே இந்த உத்தம புருஷரை அழைத்து எல்லாவற்றையும் நடந்தது நடந்தவாறே கூறினேன். இவர் அந்த வினோதத் திருட்டைக் கண்டு பிடிப்பதாகக் கூறி வாக்குறுதி செய்தார். உடனே எனக்குச் சற்று தைரியம் உண்டாயிற்று. பிறகு எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வெள்ளம் அடித்துப்போவதுபோல இந்தப்பிரபுவிற்கு இவ்வித ஆபத்து வந்துநேர்ந்து விட்டது. ஆஹா! இவருடைய குணநிசயங்களைக் கேட்டாலும் நமது பாவம் தீரும். இந்த வீரருக்கும் எனக்கும் நெடுநாளாய்ப் பழக்கமுண்டு. இவரை நானும் என்குல தெய்வமாகவே போற்றி வருகிறேன். ஆதிகாலம் முதல் இந்த மஹாத்மா எனக்கு நேரிட்ட எத்தனையோ ஆபத்துக்களை நீக்கி அஞ்சாதே என்று அபயம் கொடுத்திருக்கிறார். இந்த சுத்தவீரர் பிறந்தது முதல், தமது ஆயுளைபொது ஜனங்களுக்கு அர்ப்பணம் செய்வதிலேயே கருத்தாயிருந்துவந்திருக்கின்றாரே யன்றி, அதனால் தான் எதிர்ப் பலனையடைய வேண்டுமென்ற எண்ணமே கிஞ்சித்துகூடக் கொள்ள வில்லை. பிறருக்கு எத்தகைய உதவி செய்தாலும் அவர்களிடமிருந்து கால் காசு கூடக் கண்ணால் பார்ப்பதில்லை. தர்மத்திற்கே தாம் உழைப்பதென்ற காருணியத்தை இவர் கடைப் பிடித்திருக்கிறார். பிறருக்குக் கெடுதி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தை இவர் காலில் ஒட்டிய தூசிகூட எண்ணாது. அத்தகைய துர் எண்ணமுள்ள எந்த மனிதரும், இவருடைய முகத்தில்விழித்து விடுவாரானால், அவ்வெண்ண மெல்லாம் பஞ்சாய்ப் பறந்து விடுவது திண்ணம். உலகத்தில் கெட்ட எண்ணங் கொண்ட மனிதர்களுக்கே கேடு சம்பவிக்கும் என்று கூறுவதுண்டு. சதா காலமும் ஈச்வரன் பக்தியில் ஈடு பட்டு பிற ஜனங்களுக்கு நன்மை செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கும் பரம கல்யாணகுணம் நிறைந்த சுத்த சாத்வீக உத்தம புருஷருக்கு இவ்வித ஆபத்து நேர்ந்ததென்றால் இதைக் காலத்தினுடைய கோலமென்றுதானே சொல்ல வேண்டும். இந்த மஹான் கண்ணால் ஒரு சிறிய எறும்பும் கஷ்டப்பட சகிக்க மாட்டார் என்றால் வேறு என்ன வேண்டுமய்யா! ஆஹா! இந்தமாதிரியுள்ளவர்களுக்கு இது காலமல்ல போலிருக்கிறது. இவரை வெகுகாலமாய் நன்றாக நான் அறிந்து கூடப் பழகியுமிருப்பதால் இவருடைய ஒழுக்கம் குணம், செய்கை முதலிய முற்றிலும் நன்றாய் எனக்குத் தெரியுமாதலால் அவைகளை எல்லாம் நினைக்கும்போது, என்மனம கலங்குகின்றது. இந்த கோரமான படுக்கையைக் கண்டவுடன் என் தேகம் தளர்கின்றது. "ஹா! சர்வேச்வரா! நீர்தான் இந்த மஹானுபாவனின் ஆபத்தைத் தீர்த்துக் காக்கவேண்டும்." என்று கண்ணீரைத் தாரை தாரையாகப் பெருக்கியவண்ணம் சத்தமில்லாமல் மெல்லக் கூறி வாய்மூடுமுன் அவ்விடத்திற்கு ஆஸ்பத்திரியின் பெரியடாக்டர் வந்தார். உடனே எல்லோரும் எழுந்து மரியாதை செய்தார்கள்.

வந்தடாக்டர் ஜோக ராஜாராம் நாயுடுவைப் பரீக்ஷைசெய்துபார்த்ததும் உடனே அப்படியே பிரமித்துக் கம்பம்போல அசையாமல் மூக்கின்மேல் விரலை வைத்துக்கொண்டு "ஆ! இவருக்கு மூளையே சிதறிவிட்டதே. இன்னும் கொஞ்சநேரத்தில் இவர் கண்களை விழித்துத் தெளிவடைந்துவிடுவார். அந்த மயக்கமருந்தினால் இன்னும் ப்ரக்ஞையற்றுக் கிடக்கிறார். அதுவும் தெளிந்துவிடும் தருணமாய்விட்டது. தெளிந்தவுடன் இவர் கோராமையைக் கண்டுசகிக்க முடியாதே. இவர் மூளையுள்ள பாகத்தில் ரயிலின் சக்கரம் நன்றாகப்பட்டு உள்ளே இருக்கும் மூளை அந்த விசையினால் சிதறிப்போய்விட்டதே. என்ன செய்வது?" என்று அப்படியே நின்றுவிட்டார். அந்த விபரீதச்செய்தியைக் கேட்ட அங்கிருந்த ஏனையோரும் "ஹா! இவர் மூளையா சிதறிப்போய்விட்டது!" என்று வாய்விட்டுக் கூச்சலிட்ட வண்ணம் கல்லாய்ச் சமைந்து விட்டார்கள்.

---

## புதுவை. ஸ்ரீ மீனாக்ஷி வாசகசாலை அக்கிராசனர் திருவாளர் இராஜ. வேணுகோபால நாயகரவர்களால் சிறப்பித்துக்கூறிய திவ்விய பஞ்சரத்தினம்.

பொன்மாரிப் பொழிகப் பொலிவுற் றியைபுற சொந்நயம் பிழம்புற
தேன்மாரிப் பருக விழையுற நவின்றனர் தென்னொளி மிக்குற
மின்மாரி மிளிர்க வென்ன அமிழ்க்கமழ் பிலகுது மாண்புற
வான்மாரி நிகற்ப வாய்மை மிகுவணி புனைந்தன ரினிதே! (௧)

பைங்கரும்பி னமிர்தரச மிளகி யிதழிடை வீழ்கவே பெருகுஞ்சுவைப்
பொங்கியெழும் பாங்கிலங்கு பசும்பொற் றாழைப் பொலிகவே மகிதலந்தழைத்
தீங்குழலி னிசைப் பயப்புந்தண்பா வினிக்குஞ் கீர்த்திபெருஞ் ஜெகன்மோகினித்
திங்கடொருந் நிலவுமிழிங் நவரசச் சரிதைத் தெள்ளமுதென் றொக்குமே! (௨)

தேக்கமழ் மதுர மொழித் தண்டமிழ்த் தழைகி மழலைபயி
லுக்கியெழு லெழி லஞ்சுக மொழியுகந் தளிர்க்கு ரமணீய
மொக்கிட் டளிர் சுடர் மடுப்பக் கற்பணி மலிக நெறியுறவே
சொக்கித் தேனிடை மொய்க்கு மீக்க ளொக்க வாகுமதே! (௩)

பீடுறுநன் மரகத மாணிக்கப் பொழில்நிருவிக் கிளர்ந்தொளிர்க வட்டெழுந்
தொடுக்குஞ்சீர் மிக்கா யென்கக்கழர் வயங்கிடுதும் புலவோனெனு உ. வே
வடுவூர்கே துரைசாமி வள்ளல் வழுவருத்தனன் வைதேகி யென்கதை
விடுக்குஞ்சுவை நகறு மீனாக்ஷி வாசக சாலைப்பொற் புறவே! (௪)

மைலாடுக் கிணையிலை யென்ப தொக்கமா மகிழ்வெய்திடுந் திகழ்காதை
பாலொடு முக்கனி பயப்பத் தீஞ்சுவைக்கப் பாகுதேன் கண்டுமிலக்
மெலிடுஞ் செந்தமிழ் மதுரங் கனிந்திலகி மாந்தரகங் களியுறவே
நல்கிடுவர் நன்மணி வை. மு. நற்கோதை நாயகி வாழியவே! (௫)

## ஆங்கிலம் தெரியாத அன்பர்களே!

எங்கும் ஆங்கிலம் பாவிய இக்காலத்தில் இங்கிலீஷ் தெரியாமல்
இருக்கலாமா? அதை இப்பொழுதே கற்றுக்கொள்ளுங்கள்,
எப்பொழுதும் சுகம் பெறுவீர்கள். உங்களுக்கு எளிதில்
இங்கிலீஷைப் போதிப்பதற்கு அதிர்ஷ்டவசத்தால்,

# ஆனந்த ஆங்கில பாஷா போதினி

வெளியாய்விட்டது! வெளியாய்விட்டது!!

**640-பக்கமுள்ள அழகிய முழுகாலிகோ பைண்டுள்ளது**

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்கவும்.

விலை ரூபா **2**-தான்

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு ரூபா **1-8-0.**




இந்நூல், ஆங்கில பாஷையைத் தமிழ் மக்களுக்குத் தமிழினாலேயே இலகுவாகப் போதிக்கும் அரிய போதனா முறைகள் அடங்கியது ஆங்கிலம் பயிலும் முறைகள் இதில் அதி அற்புதமாக அமைக்கப்பட்டிருக்கின்றன; இங்கிலீஷ் வார்த்தைகளைத் தமிழிலும் இங்கிலீஷிலும் அமைத்து ஆங்கில உச்சரிப்புகள் சரியாய் வரும்படி தமிழ் எழுத்துக்களுக்குக் குறிகள் இடப்பட்டிருக்கின்றன. அதனால் தமிழ் எழுத்துக்களில் அமைந்த இங்கிலீஷ் வார்த்தைகளை சப்ததோஷமின்றிச் சரியாக உச்சரிக்கலாம். இந்த அரிய முறை வேறெந்தப் புத்தகத்திலும் அமையவில்லை. இதன் உதவிகொண்டு, ஓர் உபாத்தியாயரைத் தேடி அலையாமலும், மிக்க பணச் செலவின்றியும், நெடுந்தூரங்களிலுள்ள பள்ளிக்கூடங்களுக்குப் போகாமலும் எவரும் தங்கள் தங்கள் இருப்பிடங்களில் இருந்தபடியே இங்கிலீஷ் பாஷையை எளிதில் கற்றுக்கொள்ளலாம். பள்ளிக்கூடங்களிற் சேர்ந்து ஆயிரக்கணக்கான பணத்தைச் செலவிட்டுப் பத்து வருடங்கள் வரை ஆங்கிலம் பயிலுவதால் எவ்வளவு இங்கிலீஷ் தேர்ச்சி யுண்டாகுமோ அவ்வளவு ஆங்கில ஞானம் 40-நாட்களில் இதனால் உண்டாய்விடும். கிராம உத்தியோகஸ்தர்கள், துரைமார்களிடம் வேலை செய்யும் பட்லர், மேட்டி, பாய், கூக், ஆயாள், கங்காணிகள் முதலியவர்களுக்கும் இங்கிலீஷ் தெரியாத மற்ற ஆண், பெண், சிறுவர், சிறுமியர் முதலிய எல்லோருக்குமே இது இங்கிலீஷ் ஞானத்தை யுண்டாக்கிச் சீரும் சிறப்பும் தரும். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் அவசியம் வரவழைத்துக் கொள்ளவேண்டும்.

**“ஆனந்தபோதினி” ஆபீஸ்.**

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்.

எமது ரேஜிஸ்டர்ட் லேடி டிரேட் மார்க் போட்டிருக்கும்
புஸ்தகம் பார்த்து வாங்குங்கள்!!

# ஆங்கில ஆசான்

60 நாளையில் இங்கிலீஷ் கற்றுக் கொள்ளலாம்.

இதுவரையில் இம்மாதிரியான புத்தகம் வெளிவரவில்லை. இது இங்கிலீஷ் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக்கொள்ளக்கூடிய சுலபமான தமிழில் நன்ருய்த் திருத்தப்பட்டு 7-ம் பதிப்பாக பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. உடனே எழுதுங்கள். ராமர் பட்டாபிஷேகம், சீதாகலியாணம் 2 ஆப்டோன் படங்களுடன் 700 பக்கங் கொண்டது. விலை ரூ. 2.




தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் உபாத்தியாய ரில்லாமல் தெரிந்து கொள்ளலாம். ஒரு இங்கிலீஷ் சொல்லை உச்சரிக்கும் விதமும் அதன் அர்த்தமும், மிருகம், பட்சி, கிழமை, மாதம், வருடம், புஷ்பம், ஆயுதம், ஊர்கள் முதலியவற்றின் பெயர்களும், கடிதம் எழுதுதல், உயில், பத்திரங்கள், கல்யாண, சீமந்த, கருமாதி நோட்டீஸ்கள் முதலியன இங்கிலீஷிலும், தமிழிலும் எழுதும் விதமும், சிறு கதைகளும், பழமொழிகளும் அவற்றின் அர்த்தமும் வெகு சுலுவான நடையில் விளக்கப்பட்டிருக்கின்றன. மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் கட்டாயம் தேவை.

பினங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால் தான் புஸ்தகம் அனுப்பப்படும். கவனிக்கவும். கேட்லாக் இனம்.

## ஆநந்த குணபோதினி.

ஒரு நூதன உயர்தர மாதப் பத்திரிகை.

பிரசித்த அனுபவஞான சாஸ்திரி இதன் ஆசிரியராய் விளங்குகிருர்.

இத்தகைய நவீன சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை. இது தமிழ் அறிந்த ஒவ்வொருவர் அகத்துள்ளும் புகுந்து நிலவும் உன்னதம் வாய்ந்தது. சித்திரப் படங்களுடன் திகழ்வது. கல்விச் செல்வம், பொருட்செல்வம் பெருகி இன்பம் ஓங்குவதற் குரிய விஷயங்களால் ஒளிர்வது. அறிவை விளக்கி உற்சாகத்தைக் கொடுப்பது. நன்னடக்கையும், லௌகிக யுக்தியும், பாஷை ஞானமும், தேசாபிமானமும் ஈசுவர பக்தியும், ஆழ்ந்த யோசனையும் உண்டாக்கக் கூடியது. எல்லா மதஸ்தர்களுக்கும், எல்லா ஜாதியார்களுக்கும் ஏற்றதாய் நல்ல விஷயங்கள் இருக்கப் பெற்றது. சொல் நயம் மிகுந்து தமிழ் உலகமெல்லாம் ஜொலிக்கும்படியாயிருப்பது "ஆனந்தகுணபோதினி" தான் ஆடவர், மகளிர், பெரியோர், சிறியோர் எவர்கையிலும் இப் பத்திரிகையை இனிக் காணலாம்.

இதில் "ஆனந்த தரிசனம்" "பழமொழிக் குறிப்புகள்" "பத்திரிகா சாரம்" "பெண்கள் பக்கம்" பிரபஞ்ச தரிசனம்" "விகடப் பிரதாபன்" "சென்ற மாதம்" என்ற தலைப் பெயர்களின் கீழ்வரும் ஒவ்வொரு விஷயங்களும் சிந்தைக்கினிய வாய்க்கினிய அலங்கார வசன மழையாய் விளங்கும். இப்பத்திரிகையே எவ்விஷயத்திலும் வெகு சிறந்ததென்பதைத் தங்களுடைய அனுபவத்தில் தாங்களே அறிந்து கொள்ளலாம். ஆநந்த குணபோதினியின் சொரூப சந்தாவை உற்று நோக்குங்கள். வருஷசந்தா ரூபாய் ஒன்றே (ரூ. 1.) இன்றே எழுதுங்கள். உடனே சேருங்கள்.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலை தெருவு,
மின்ட் பில்டிங் போஸ்டு, மதராஸ்.

# கிறிஸ்மஸ் புது வருட பண்டிகைகளில்

# பரிசளிக்கத் தகுந்த சாமான்

இச்சஞ்சிகை சந்தாதார்களுக்குமட்டும் இக்குறைந்த விலை.


கடியாரங்களின் விலைகள் குறைக்கப்பட் டிருக்கின்றன.

முந்துங்கள் ! முந்துங்கள் !! முந்துங்கள் !!!


**எல்லா கடிகாரங்களுக்கும் 5 வருஷம் உத்தரவாதம்**

**22 காரட்டு ரோல்டுகோல்டு கைக்கடியாரங்கள்**


**பட்டுப் பட்டையுடன் நன்றாய் உழைக்கக்கூடியன.**




NO. 505, Rs. 10.




NO. 507, Rs. 12.




NO. 518, Rs. 10



NO. 511, Rs. 11.



NO. 517, Rs. 13.



NO. 510, Rs. 13

நேர்த்தியான வேலைப்பாடுள்ளது

சரியான காலத்தைக் காட்டக்கூடியது.

**உடனே எழுதுங்கள்.**

ஒவ்வோர் கடியாரத்துடனும் ஓர் உயர்ந்த பவுண்டன் பேனா
இனமாக அனுப்பப்படும்.

விலாசம் :— [illegible]ட்டர் வாட்ச் கம்பெனி,

போஸ்ட் பாக்ஸ் நெ. 27

மதராஸ்.

# அமிர்தாஞ்சனம்

அமிர்தா ஞ்சனம்




சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்

விலை அணா 10 ரூ. 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது.
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங் செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோவுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்சனமே.
தலை வலி, முதுகு வலி, கீல் பிடிப்பு முதலிய
சகல நோய்களையும் நொடிப்பொழுதில்
தீர்க்கும்.

உடனே முந்துங்கள்.

மோஹினி தைலம்.
பாட்டில் 1-க்கு 0—12—0

படைமருந்து
டப்பி 1-க்கு 0—6—0

பல்பொடி
டப்பி 1-க்கு 0—2—0

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

**அமிர்தாஞ்சன் [illegible]போ,**

**7. தம்புச் செட்டி [illegible]தி, சென்னை.**

சென்னை, நோபில் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.